
# சொர்க்கம்



விபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயமதில் பிறர் வாழ இடமளித்து,

உதயமாகும் நல்லுறவின் விளக்கமாக,

முன் நோக்குப் பாதையை நோக்கி இணைந்தே,

இன் முகத்தோடு இனிது பேசியே,

என்றும் நன்றாய் அன்போடு வாழ்ந்தே,

அவனியில் சொர்க்கம் நோக்கி நகர்வோம்.

**அச்சேற்றலாம்**

அருட்கலாநிதி ப.ஜோ. ஜெபரட்ணம்,

குருமுதல்வர்,

யாழ்ப்பாண மறை மாவட்டம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொர்க்கம்

விபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு: சொர்க்கம்

ஆசிரியர்: கலாநிதி டேவிற் வின்சன் பற்றிக், அமதி
முதல்வர், தொடர்பகம், 657/1, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம்

பக்கம்: IV + 64

முதலாவது பதிப்பு: ஆனி, 2018

பதிப்புரிமை: ஆசிரியர்

அச்சகம்: மதி கலர்ஸ்

அட்டைப்படம் & பக்க வடிவமைப்பு : அல்பேட் பெஸ்ரியன்

விலை: 200 ரூபா

பொருள்: ஆன்மீகம்

கிறிஸ்து இயலைச் சுருக்கமாகத் தரும் நூல் இதுவாகும். இயேசுக்கிறிஸ்துவின் வாழ்வியல் மூலம் மனிதத்திற்கு புதுவெளிச்சம் கொடுக்கும் வகையில் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. இது வாசகர்கள் இலகுவில் இறைவனோடு இணைந்து, அவனியில், அமைதியின் தூதுவர்களாய் வாழத் தூண்டுவிக்கிறது.

Title: Sorkam

Author: Dr. David V. Patrick, omi
Superior, Thodarpaham, 657/1, Hospital Road, Jaffna

Pages: VII + 62

1st Edition: May 2018

Copyright: Author

Publisher: Oblate Publication, Jaffna

Press: Mathy Colours

Cover Design & Layout : Albert Bastian

Price: Rs. 200/=

ISBN: 978-955-7706-08-5

Content: Spirituality

This book outlines Chistology in a short form. It gives light to humanity through the life of Jesus Christ. It enables the readers to associate themselves closely with Jesus Christ and stimulates them to became the effictive messangers of peace in entire the world.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே

**01.** ஆண்டவரே என் ஆயர்

**02.** ஆண்டவர் அழைக்கிறார்

**03.** இறை வாக்கு

**04.** இயேசு வாழ்வின் அப்பம்

**05.** கிறிஸ்தவ சீடத்துவம்

**06.** இறைவனின் அன்பு

**07.** நல்வாழ்விற்கான படிமுறைகள்

**08.** என்னை மாற்றியருளும்!

**09.** விருந்தோம்பலின் விழுதுகள்

**10.** இதயபூர்வமான தொடர்பாடல்

**11.** கருணை மழை பொழிதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

மனித வாழ்வு என்பது மண்ணோடு மறைந்துவிடும் ஒன்றல்ல. அது இறைவனில் முற்றுமுழுதாகச் சங்கமமாகும்பொழுதே பேற்றினைப் பெறுகின்றது. மனித வாழ்வு எனும் நீரோடையைக் கடக்கக் கண்டிப் பாகத் தேவைப்படுவது தூய அன்புக்கலையாகும். அன்பு இறைவனிட மிருந்தே சுரக்கின்றது. அதனைச் சுவைத்து எல்லா மக்களையும் இன்புற வைத்தலே இறைத்திட்டத்தின் சராம்சமாகும்.

ஒரு உருவகக்கதை. ஒருமுறை ஒருவர் திடீரென இறந்துவிட்டார். இறு தித் தீர்ப்பிற்காக அவரது ஆன்மா இறைவன்முன் நிறுத்தப்பட்டது. அப்பொழுது இறைவன் அற்புதமாகச் செயற்பட்டார். ஆன்மா சொர்க் கத்திற்கும் நரகத்திற்கும் ஒவ்வொரு நிமிடம் சென்று தரிசனம் செய்த பின்னர் தீர்மானம் எடுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. உடனே வான தூதர் ஒருவர் அவ்வான்மாவைக் கூட்டிச் சென்று சொர்க்கத்தைக் காண் பித்தார். அங்கே புனிதர்களும் வானதூதர்களும் 'தூயவர், தூயவர்' என இறைனைப் புகழ்ந்துபாடுவதையும் பேறுபெற்ற நல்லோர் எல்லோ ரும் அக்களிப்போடு செபிப்பதையும் அவதானிக்கக் கூடியதாயிருந்தது, அடுத்து, சாத்தானால் ஆன்மா நரகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கே பழைய நண்பர்கள் "சியர்ஸ்" சொல்லி மது அருந்துவதையும் பொரித்த தின்பண்டங்கள் தின்பதையும் அவதானிக்கக் கூடியதாயிருந் தது. ஒரு நிமிடம் முடிந்துவிட்டது.

மீண்டும் இறைவன் முன்னால். தேர்வை மேற்கொள்ளுமாறு இறைவன் வேண்டுகோள் விடுத்தார். "எனது தெரிவு நரகமே" என ஆன்மா பதில் சொன்னது. தாமதமின்றி ஆன்மா சாத்தானால் நித்திய நரகத்திற்குக் கொண்டுபோய் சேர்க்கப்பட்டது. அவ்வேளை எரிநெருப்பில் வெந்து நொந்து கொண்டே "ஏன் என்னை ஏமாற்றிவிட்டாய்?" என்று ஆன்மா அலகையோடு பேசியது. "நீ உலகில் இருந்தபொழுது வாழ்க்கை பூரா கவும் பல நூறு மக்களை ஏமாற்றினாய் என்பதை மறந்துவிட்டாயா? நான் உன்னை ஒரு நிமிடம்தானே ஏமாற்றினேன். பொருத்தமான இடத்தை நீயே தேர்ந்தெடுத்துவிட்டாய்" என்று அலகை அதட்டியது.

ஆசியுரை வழங்கிய வசந்தக இயக்குனரும் சிறந்த ஆற்றுப்படுத்துனரு மான அருட்பணி எஸ். டேமியன் அமதி அவர்களுக்கும் நூலினை அழகுற வடிவமைத்த கலைஞர் அல்பேட் பெஸ்ரியன் அவர்களுக்கும் அன்பு வாசக நேயர்களுக்கும் நன்றிகள் பல உரித்தாகட்டும்!

**அன்புடன் விபி,** *27.05.2018.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. ஆண்டவரே என் ஆயர்

## 1.1. ஆண்டவர் நல்லவர்

*"ஆண்டவர் எனது ஆயர்
எனக்கேதும் குறையில்லை" - தி.பா. 23:1.*

இறைவன் எமது நல் ஆயனாக, அன்புத் தந்தையாக இருக்கும் பொழுது எனக்கு எந்தவிதமான குறையும் எழாது. ஆனால் பொறுப்பற்ற குடிகாரத் தந்தையின் பிள்ளைகளுக்கு இறைவனை 'அப்பா' என்று அழைக்கும்பொழுது அது புரிந்துகொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கும். ஏனெனில், அவர்கள் தமது தந்தையிடமிருந்து உண்மையான அன்பைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதேயாகும்.

இறைவன் எப்பொழுதும் வல்லவரும் நல்லவருமான அன்புத் தந்தையாகவே விளங்குகின்றார். 'அப்பா நல்ல தந்தாய்' என்பதையே இறைவனைப் பற்றிய விளக்கமாக புனித குழந்தை இயேசுவின் தெரேசா முன்வைக்கின்றார்.

*"நீங்கள் பெற்றுக் கொண்டது திரும்பவும் அச்சத்திற்குள்ளாக்கும் அடிமையுள்ளம் அன்று. பிள்ளைகளாக்கும் தேவ ஆவியையே பெற்றுக் கொண்டீர்கள். அந்த ஆவியினால்தான் 'அப்பா தந்தாய்' எனக் கூப்பிடுகின்றோம்" - உரோ. 8:15.*

*"நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள். கடவுளின் மக்கள் என அழைக்கப்படுகின்றோம். கடவுளுடைய மக்களாகவே இருக்கின்றோம்" - 1 யோவான் 3:1.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தவன் படி அளப்பான் என்பதற்கொப்ப இறைவன் எமது தேவைகளை நிறைவுசெய்வதில் ஆற்றல்மிக்கவராக, கரிசனையோடு எம்மைக் கண்காணித்துக் காப்பவராகச் செயற்படுகின்றார்.

## 1.2. அருள் பொழிகின்றார்

*'பசும்புல் வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார்.*
*அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார்" - தி.பா.23:2.*

நல்ல ஆயன் தனது ஆடுகள் நன்றாகத் இன்புறவேண்டும் என்ற நோக்கத்தோடு நல்ல மேய்ச்சல் நிலத்திற்கு அழைத்துச் செல்வதில் அக்கறையுடையவனாகக் காணப்படுவான். அதுபோல இறைவன் நாம் நிறைவுபெற்று வாழ அருள்வளத்தையும் அன்புவளத்தையும் பொழிபவவராக விளங்குகிறார்.

மேலும் செம்மறியாடு பயந்த சுபாவம் உடையது. வேகமாக ஓடும் தண்ணீருக்குப் பயந்தது, எனவே, அதன் பயந்த நிலையைப் பார்த்து பரிகசிக்காது ஆயன் ஆடுகளை அசைவற்ற நீர்ச்சுனைக்கு அழைத்துச் செல்வார். அப்படி அது கிடைக்காவிடில் கற்களால் அணைக்கட்டு கட்டி, தற்காலிக குட்டை ஒன்றினை அமைத்து, அவை தண்ணீர் குடிக்குமாறு ஏற்பாடு செய்கிறார்.

எமது ஆயனான இறைவனும் எமது வரையறைகளை அறிந்தவராய் எம்மை ஏளனம் செய்யாது எம்மைக் குறைகளோடும் நிறைகளோடும் ஏற்றுக் கொள்கிறார். எம்மால் இயலாதவற்றை நாம் செய்யும்படி அவர் கட்டாயப்படுத்துவதில்லை. மாறாக எமது சுமைகளை இலகுபடுத்தி, எம்மை இனிதாக நடத்துகிறார்.

புயலுக்குப் பின்னே அமைதி!
சோதனையின் பின்னே சாதனை!

வாழ்வில் ஏற்படும் சாதனைகள், சோதனைகள், வேதனைகள் யாவும் அசைவற்ற நீர்ச்சுனைக்கு எம்மை அழைத்துச் செல்கின்ற ஆயனாக இறைவன் விளங்குகின்றார் என்பதை விளக்குகிறது. இத்தகைய பராமரிப்பில் எம்மை முழுவதும் அர்ப்பணிப்பது எவ்வளவோ நலமிக்கது.

அசைவற்ற நீர் அமைதி, இறைவனோடு தனித்திருத்தல், தியானம் போன்றவற்றைக் குறிப்பிடுகின்றது. இது உள்ளம் பூரிப்படைந்த, நிறைவான நிலையை வெளிப்படுத்துகின்றது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3. நேரிய வழியில் நெறிப்படுத்துகின்றார்

*'அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார்.*
*தம் பெயருக்கேற்ப எனை நீதி வழி நடத்திடுவார்' - தி.பா. 23:3.*

புளொறிடாவிலுள்ள பாடும் கோபுரத்தில் பின்வருமாறு பொறிக்கப் பட்டுள்ளது:

'இங்கு நாம் வந்திருப்பது எம்மைக் கண்டுபிடிக்க:
ஏனெனில் உலகில் எம்மை இலகுவில் இழந்துவிடலாம்.

பல தெருக்கள் சங்கமிக்கும் சந்தியில் வந்து தத்தளிக்கும் நிலை பக்த னின் வாழ்வில் ஏற்படலாம். இக்கட்டான சந்தர்ப்பத்தில் இறைவ னால் வழிப்படுத்தப்படுவது அவசியமாகின்றது. நாய், பூனை போன்ற விலங்குகளைப் போலல்லாது, திக்குத் திசை உணர்வு, தூரப் பார்வை குறைந்தவையாய் செம்மறி ஆடுகள் ஆயனில் முழுமையாகத் தங்கிய வையாய் அவை ஆயனைப் பின்தொடர்கின்றன. இவ்வாறே நாமும் இறைவனில் முற்றுமுழுதாகத் தங்கியிருப்பது எமது நல்வாழ்விற்கு அவசியமாகின்றது.

## 1.4. எம்மோடு என்றும் இருக்கின்றார்

*'மேலும் சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான்*
*நடக்க நேர்ந்தாலும் நீர் என்னுடன் இருப்பதால் எத்தீங்கிற்கும்*
*அஞ்சிடேன். உம் கோலும் கழியும் என்னைத் தேற்றும்' - தி.பா. 23:4.*

சாவின் நிழற் பள்ளத்தாக்கு பலஸ்தீனா நாட்டில் அமைந்துள்ளது. இது ஜெருசலேமில் ஆரம்பித்து செங்கடலில் முடிவடைகின்றது. மிகவும் அபாயகரமான, கரடுமுரடான, குறுகலான பாதை இது. சிறிது தவறினா லும் மரணமே! அத்தகைய ஆபத்தான பாதையில் ஆடு பயணித்தாலும் அது அச்சமுறாது. காரணம் ஆயன் தன்னுடன் கரிசனையுடன் இருக் கிறான் என்பதேயாகும்.

இலகுவில் வனவிலங்குகளுக்கு இரையாகக்கூடிய செம்மறி ஆடுகளை வனவிலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக ஆயன் 3 அடி நீளமான கோலினையும் 9 அடி நீளமான கைத்தடியினையும் (கொழுக்கியுடன் வளைந்து காணப்படும் தடி) கொண்டு செல்வது வழக்கம். தாவீது அரசர் இவற்றின் உதவியுடன் சிங்கத்தையும் கரடியையும் கொன்று தன் மந்தையைக் காப்பாற்றினார் (1 சாமுவேல் 17). அவ்வாறு அனுபவத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்மூலம் பெற்ற அறிவைப் பயன்படுத்தி, ஆண்டவர் தமது மக்களைக் காப்பதில் விழிப்பாயிருக்கிறார் என்பதைத் திருப்பாடல் ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார். மேலும் செங்குத்தான மலைச் சரிவில் ஆடு விழுந்துவிட்டால் ஆயன் கைத்தடியின் உதவியுடன் ஆட்டைக் காப்பாற்றுவான்.

## 1.5. எதிரிகளிடமிருந்து விடுவிக்கின்றார்

*'என் எதிரிகளின் கண்முன்னே எனக்கொரு விருந்தினை*
*ஏற்பாடு செய்கின்றீர். என் தலையில் நறுமணதைலம் பூசுகின்றீர்*
*எனது பாத்திரம் நிரம்பி வழிகின்றது' - (தி.பா. 23:5).*

பலஸ்தீன நாட்டின் மேய்ச்சல் நிலத்தில் சில நச்சுச் செடிகள் வளர்ந்துள்ளன. அவற்றை ஆடுகள் உண்டால் அவற்றின் உயிருக்கே ஆபத்தானது. அத்தோடு அங்கு வளர்ந்துள்ள முட்செடிகள் ஆடுகளின் மென்மையான மூக்கிலே குத்தி, புண்களைத் தோற்றுவிக்கும். எனவே ஆட்டினது இத்தகைய பகைவர்களை மண் வெட்டியால் கொத்தி, வெளியே எடுத்துக் குவித்து, நெருப்பில் எரிப்பான். இவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்பொழுது தரையின்கண் பசும்புல்லானது ஆடுகளுக்கு நல்விருந்தாகின்றது.

இனி ஆடுகளைப் பட்டிக்குள் விடும்பொழுது ஆயன் ஒவ்வொரு ஆட்டையும் தனியனாகக் கவனிக்கிறான். காயப்பட்ட ஆட்டின் மீது எண்ணெய் பூசுகிறான். பெரிய பாத்திரத்தில் நிரம்பியுள்ள தண்ணீரைக் குடிக்க வைக்கிறான்.

*'நல்ல ஆயன் நானே! நல்ல ஆயன் ஆடுகளுக்காகத் தன் உயிரையே*
*கொடுப்பான். என் ஆடுகளை நான் அறிவேன். அவையும் என்னை*
*அறிகின்றன" - (யோவான் 10:11-12).*

இவ்வாறு இயேசு மொழிந்து தமக்கும் எமக்கும் இடையே நிலவும் அன்புத் தொடர்பை உறுதிப்படுத்துகிறார். எம்மை அர்ச்சித்து, ஆசீர்வதித்து தம்மோடு இணைத்துக் கொள்கிறார்.

## 1.6. அவரது இல்லத்தில் குடியிருப்போம்

***'உண்மையாகவே என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும்***
***பேரன்பும் எனைப் புடை சூழ்ந்துவரும். நானும் ஆண்டவரது***
***இல்லத்தில் வெகுநாள் வாழ்ந்திருப்பேன்' - (தி.பா. 23:6).***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை **23**ம் திருப்பாடலை நடித்துக் காட்டும் போட்டி இடம் பெற்றது. புகழ்பெற்ற நடிகன் ஒருவன் இத் திருப்பாடலை வெகு சிறப்பாக நடித்து வாசித்துக் காட்டினான். ஆரவாரத்துடன் எல்லோரும் கைதட்டிப் பாராட்டினார்கள்.


இன்னும் பலர் நிகழ்ச்சியில் பங்கெடுத்தார்கள். ஈற்றில் எளிமையான தோற்றம்மிக்க ஒருவர் எழுந்து, ஆயனைப் பற்றி அறிந்தவராக அல்ல, மாறாக ஆயனையே அறிந்த நல்பக்தனாக வாசித்துக் காட்டி அனைவரையும் பரவசத்தில் மூழ்கடித்தார். அவரே பரிசினையும் தட்டிக் கொண்டார்.

இறைவனை மேலெழுந்தவாரியாக அல்ல, ஆழமாக இறைவனை அறிந்தவர்களாக வாழவேண்டும் என்றே இறைவன் விரும்புகிறார். அவரது அன்பையும் அருளையும் பெற்று அவரது இல்லத்தில் நாளாந்தம் வாழும்பொழுது நாம் நிறைவான பேரின்பத்தை அனுபவிக்கலாம்.

"இறைவா! உமது பேரன்பிற்கேற்ப எனக்கு இரங்கும்.
உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும்.
என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும்.
என் பாவம் அற்றுப்போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும்"
- (*தி.பா. 51:1-2*).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. ஆண்டவர் அழைக்கிறார்

இறைவன் தமது சாயலாக மனிதனைப் படைத்து, தம்மை மகிமைப் படுத்தி வாழ அன்புவழி வாழ்க்கைக்கு அழைக்கின்றார். மனிதர் எல்லோரும் மனித மகத்துவத்தோடும் இறைமக்கள் என்ற உணர் வோடும் இறைவனுக்குப் பிரியமான முறையில் பிரமாணிக்கமாய் வாழ வேண்டும் என்பதே இறை அழைப்பின் உட்பொருளாகும்.

அழைப்பு ஒரு தெய்வீகத் தேர்ந்தெடுத்தலாகும். இறை விருப்பத்தை நிறைவேற்றுவதே மனித வாழ்வின் இலக்காக அமைகின்றது. அழைப்பு மனிதனின் அக, புற வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இச் சந்தர்ப்பங்களில் ஆப்ராம் 'ஆபிரகாம்' எனவும் சீமோன் 'பேதுரு' எனவும் அழைக்கப்படுகிறார். 'ஏன்? என்ன செய்யவேண்டும்?' போன்ற கேள்விகளுக்குப் பொருத்தமான பதில் கிடைக்காமலே சீடர்கள் இயேசுவைப் பின் தொடர்ந்தார்கள். இது மனித கணிப்பில் முட்டாள் தனமானது.

இயேசு கடலோரக் கரையோரமாய் சென்றபொழுது சீமோனையும் அவரது சகோதரரான அந்திரேயாவையும் கண்டார். மீனவர்களான அவர்கள் கடலில் வலை வீசிக் கொண்டிருந்தார்கள். இயேசு அவர் களைப் பார்த்து, "என் பின்னே வாருங்கள். நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு அவரைப் பின்பற்றினார்கள் (மாற்கு 1:16-18).

பின்னர் சற்று அப்பால் சென்றபொழுது செபதேயுவின் மகன் யாக்கோபையும் அவரது சகோதரர் யோவானையும் இயேசு கண்டார். அவர்கள் படகில் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தார் கள். உடனே இயேசு அவர்களை அழைத்தார். அவர்களும் தந்தை செபதேயுவை கூலியாள்களோடு படகில் விட்டுவிட்டு அவர் பின் சென்றார்கள் (மாற்கு 1:20).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்செல்லுவதே சீடத்துவமாகும். பழைய போர்வைகளைக் களைந்து விட்டு புதிய வாழ்வினை அனுபவிக்க சீடன் காலடி எடுத்து வைக்கின்றான். பாதுகாப்பான சூழலிலிருந்து பாதுகாப்பற்ற புதியதொரு வாழ்க்கை நிலைக்குத் தள்ளப்படுகின்றான்.

நிகழ்காலத்தைப் புரியாதநிலையில், எதிர்காலத்தைத் தெரியாத நிலையில், அழைப்பின் ஆபத்தைச் சீடன் ஏற்றுக்கொள்கின்றான். ஆரம்ப காலக் கற்பனைகள், எதிர்கால இலட்சியங்கள் அனைத்தும் தவிடு பொடியாகின்றன. கண்கள் கட்டப்பட்டு காட்டில் விடப்பட்ட நிலை. பாதை தெரியவில்லை. எனினும் பயணம் தொடர்கின்றது. அவனுக்கு எல்லாம் இயேசுமயம். பாசமும் பரிவன்பும் பாதையும் பயணமும் எல்லாமே இயேசுதான்.

இயேசுவில் அவன் ஒரு விடுதலைப் பறவை. எந்தவொரு சட்டமும் அவனைக் கட்டுப்படுத்த முடியாது. இயேசு ஒருவரே அவனது மேல் வரிச் சட்டம். சீடன் குருவோடு இணைந்தவன். குருவிலே வாழ்பவன். இவ்வாறு கிறிஸ்து இயேசுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு சீடனும் 'நான்' என்ற குறுகிய வட்டத்தை விட்டு 'நாம்' என்ற, 'கிறிஸ்து' என்ற பெரிய வட்டத்திற்குள் வலம் வருகின்றான்.

ஆபிரகாம் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டதும் இறைவனிடம் முழுமையாகச் சரணடைகின்றார். அவரது வார்த்தையில் நம்பிக்கை வைத்தவராய் தனது வாழ்க்கையினை முற்றாக மாற்றிவிடுகின்றார். இக் கடவுளுக்குத் தனது மகனையும் பலியிட அவர் தயங்கவில்லை.

"பையன்மேல் கை வைக்காதே. அவனுக்கு எதுவும் செய்யாதே. உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிடத் தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்பொழுது நான் கண்டுகொண்டேன்" என்று கூறி கடவுள் ஆபிரகாமை ஆசீர்வதித்தார் (தொடக்க நூல் 23:12).

மோசேயின் அழைப்பு (வி.ப. 3:4-15)

கிதியோனின் அழைப்பு (நீதித் தலைவர்கள் 6:11-18)

எசாயாவின் அழைப்பு (எசாயா 6:1-10)

எரேமியாவின் அழைப்பு (1:4-10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய இறைவார்த்தைப் பகுதிகளில் பின்வரும் சிறப்புப் பண்புகளைப் பொதுவாக அவதானிக்கலாம். அவையாவன:

**1. சந்திப்பு**

**2. வாழ்த்து**

**3. பணித்தல்**

**4. பின்வாங்கல்**

**5. உறுதியளித்தல்.**

**1. சந்திப்பு**

மனிதனை ஆட்கொண்டு, மாற்றுவித்து, இறைசந்திப்பு, சாதாரண சூழலில் இடம்பெறுகின்றது. மோயீசன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கையில், கிதியோன் திராட்சை ஆலையில் கதிர்களை அடித்துக் கொண்டிருக்கையில் இறைஅழைப்பு நிகழ்கின்றது.

**2. வாழ்த்து**

அழைக்கப்பட்டோர் முதலில் இறைவனால் வாழ்த்தப்படுகின்றனர். அழைக்கும் இறைவன் தம்மை அறிமுகப்படுத்துகின்றார். அழைக்கப் பட்டவரோடு ஆழமான உறவைத் தாம் கொண்டிருப்பதாக வெளிப்படுத்துகின்றார். மோயீசனிடம், 'நானே ஆண்டவர். எகிப்தியரின் பாரச் சுமைகளை நான் உங்களிடமிருந்து அகற்றுவேன். உங்களை அடிமைப்படுத்துவதிலிருந்து விடுவிப்பேன். உங்களை என் மக்களாகத் தேர்ந்தெடுத்தேன். உங்களுக்குக் கடவுளாக நான் இருப்பேன். ஆபிரகாமிற்கும் ஈசாக்கிற்கும் யாக்கோப்பிற்கும் கொடுப்பதாக வாக்களித்த அந்த நாட்டிற்கு உங்களை நான் கூட்டிக் கொண்டு செல்வேன்' (வி.ப. *6:6-8*) என்றும் 'வலிமைமிக்க வீரனே! ஆண்டவர் உன்னோடு இருக்கின்றார்' (நீதித் தலைவர்கள் *6:12*) என்றும் 'தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன்' (எரே. *1:5*) என்றும் சேராபீன்களில் ஒருவர் மற்றவரைப் பார்த்து 'படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர், தூயவர். மண்ணுலகு முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது' என்று உரத்த குரலில் கூறியும் (எசாயா *6::3*). இறைவன் தம்மை அறிமுகம் செய்துகொண்டார்.

**3. பணித்தல்**

சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள், அநீதிகள், சுரண்டல்கள், சுமைப்படுத்தல்கள் போன்ற சமுதாயத்துச் சலனங்களைக் களையவே இறைவன் இறைவாக்கினரை அனுப்புகின்றார். சமுதாயத்துச் சாக்கடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், சாதிச் சகதிகள், பிரிவினை வாதங்கள், பிரதேசச் சார்புகள் போன்ற அனைத்திற்கும் உலை வைத்துப் புதுவாழ்வில் பயணிக்க இறைவன் இறைவாக்கினரைப் பணித்தார்.

அப்போது ஆண்டவர் கூறியது: 'எகிப்தில் என் மக்கள் படும் துன்பங் களை என் கண்களால் கண்டேன். அடிமை வேலை வாங்கும் அதிகாரி களை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலைக் கேட்டேன். எனவே, எகிப்தியரின் பிடியிலிருந்து இஸ்ராயேலை விடுவிக்கவும் அந்நாட்டி லிருந்து பாலும் தேனும் பொழியும் பரந்ததோர் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன். இப்போது இதோ இஸ்ரா யேல் மக்களின் அழுகுரல் என்னை எட்டியுள்ளது. மேலும், எகிப்தியர் அவர்களுக்கு இழைக்கும் கொடுமையையும் கண்டுள்ளேன். எனவே, இப்பொழுதே போ. இஸ்ராயேல் இனத்தாராகிய என் மக்களை எகிப்தி லிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பாரவோனிடம் அனுப்புகிறேன்' (வி.ப. *3::7-10*).

உன்னை மக்களினங்கள் மேலும் அரசுக்கள் மேலும் பொறுப்பாளராக ஏற்படுத்தியுள்ளேன்' (எரே.*1:10*) என்று எரேமியாவிடம் இறைவன் மொழிந்தார்.

**4. பின்வாங்கல்**

அழைக்கப்பட்டோருக்கு மாபெரும் பணி இறைவனால் வழங்கப்பட்ட பொழுது அவர்கள் பயப்பட்டார்கள். பதட்டம் அடைந்தார்கள். பின் வாங்கினார்கள். 'என்னால் இயலாது' என்று அங்கலாய்ப்போடு மறுப் புத் தெரிவித்தார்கள்.

மோசே கடவுளிடம், 'பார்வோனிடம் போவதற்கும் இஸ்ராயேல் மக் களை எகிப்திலிருந்து அழைத்துச் செல்வதற்கும் நான் யார்?' என்றார் (வி.ப. *3:11*).

கிதியோன் ஆண்டவரிடம், 'என் தலைவரே! எவ்வகையில் நான் இஸ்ராயேலை விடுவிப்பேன்? இதோ! மனாசேயிலேயே நலிவுற்று இருப்பது என் குடும்பம். என் தந்தை வீட்டிலே நான்தான் சிறியவன்' என்றார் (நீதித் தலைவர்கள் *6:15*).

'ஐயோ, நான் அழிந்தேன். ஏனெனில், தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான். தூய்மையற்ற உதடுகள் கொண்ட மனிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் நடுவில் வாழ்பவன் நான். படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டுகொண்டனவே' என்றேன் (எசாயா 6:5).

நான், 'என் தலைவராகிய ஆண்டவரே, எனக்குப் பேசத் தெரியாதே. சிறுபிள்ளை தானே' என்றேன் (எரேமியா 1:5).

கடவுளா? உலகமா? எதைத் தேர்ந்தெடுப்பது என்று தெரியாது இரண்டிற்குமிடையே தள்ளாடித் தயங்குகின்றான் அழைக்கப்பட்டவன்.

**5. உறுதிப்படுத்தல்**

அப்போது கடவுள், 'நான் உன்னோடு இருப்பேன். மேலும் இம்மக்களை எகிப்திலிருந்து அழைத்துச் செல்லும்பொழுது நீங்கள் இம்மலையில் கடவுளை வழிபடுவீர்கள். நானே உங்களை அனுப்பினேன் என்பதற்கு அடையாளம் இதுவே' (வி.ப. 3:12).

ஆண்டவர் கிதியோன் பக்கம் திரும்பி, 'உன்னுடைய இதே ஆற்றலுடன் செல்வாய். மிதியானியர் கையிலிருந்து இஸ்ராயேலை நீ விடுவிப்பாய். உன்னை அனுப்புவது நான் அல்லவா?' என்றார் (நீதித் தலைவர்கள் 6:14).

அப்பொழுது சேராபீன்களுள் ஒருவர் பலிப்பீடத்திலிருந்து நெருப்புப் பொறி ஒன்றைக் குறட்டால் எடுத்து என்னை நோக்கிப் பறந்துவந்தார். அதனால் என் வாயைத் தொட்டு, 'இதோ இந் நெருப்புப் பொறி உன் உதடுகளைத் தொட்டது. உன் குற்றப் பழி உன்னை விட்டு அகன்றது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது' என்றார் (எசாயா 6::6-7).

ஆண்டவர் என்னிடம் கூறியது: 'சிறுபிள்ளை என்று சொல்லாதே. யாரிடமெல்லாம் உன்னை அனுப்புகின்றேனோ அவர்களிடம் செல். எவற்றையெல்லாம் சொல்லக் கட்டளையிடுகின்றேனோ அவற்றைச் சொல். அவர்கள்முன் அஞ்சாதே. ஏனெனில் உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கின்றேன்' (எரே. 1:7-8).

இறைவனின் தொடர்ச்சியான பிரசன்னமும் உறுதியான வழிநடத்தலும் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்களுக்கு அதிகாரத்தையும் ஆற்றும் பணிக்கு இசைவையும் அளிக்கின்றது.

அழைப்பு புதுவிதமானதாய், புரட்சிகரமான வாழ்க்கைக்கு இட்டுச் செல்வதாய், பல்வேறுபட்ட எதிர்ப்புக்களை எதிர்கொள்வதாய் அமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. மோசேயும் கிதியோனும் எதிரிகளுடன் போராடினார்கள். இறைவாக்கினர்கள் மக்களின் விசுவாசமின்மைக்கும் ஒழுக்கக் கேட்டிற்கும் எதிராகப் போராடினார்கள். அநீதியான சமூக அமைப்புக்களை முறியடிக்குமாறு அவர்கள் குரல் எழுப்பினார்கள். அவர்கள் சில வேளைகளில் ஏற்கெனவே ஏற்கப்பட்ட வரையறைகளையும் சட்ட திட்டங்களையும் மாற்றியமைக்க முயற்சித்தார்கள். அவர்கள் கடவுளின் பிரதிநிதிகளாக, நிகழ்சாலச் சூழலில் பாதிக்கப்பட்டோரைச் சந்தித்து, நீதி சார்பாகச் சவால் விடுத்து, அவர்களைச் சிந்திக்க வைத்தார்கள்.

இந்த வளர்ச்சியில், ஏழைகளின் ஏற்றத்தினை முன்வைத்து, ஏழைகளுக்கு நல்வாழ்வு நல்குவதற்காக ஏழைகள் சார்பாக சிறப்பான அக்கறை எடுத்து அவர்களை மனித மாண்புடன் வாழவைப்பதற்காக அதிகப்படியான துறவறசபைகள் 18ம், 19ம் நூற்றாண்டுகளில் உருவாக்கப்பட்டன. ஆனால் இன்று சில துறவறசபைகள் தமது உயர்ந்த இலக்குகளை மறந்தநிலையில் தமது சொந்த சௌகரியங்களைப் பலப்படுத்திய வண்ணம் மனித மாண்பு, மனித உணர்வு போன்றவற்றை அசட்டை செய்து அடிமைத்துவத்தை வளர்க்கும் அமைப்புக்களாக மாறிவருவது கவலைக்குரியதே. ஏழைகளின் அழுகுரலுக்குச் சிறிதும் செவிமடுக்காது, அவர்கள் சார்பாக நீதியான செயற்பாடுகளில் ஈடுபடாது பின்வாங்குவது இறைஇராட்சிய எதிர்ச்சாட்சியமாகவே முடிவடைகின்றது,

எந்த ஒரு அமைப்பும் பிறர் சார்பான அக்கறை, சமுதாய மயமாக்கல், மனித மாண்பு தொடர்பான ஈடுபாடு போன்ற தொடர்பாடல் இல்லாத நிலையில் கிறிஸ்தவ தன்மை குறைந்த அமைப்பாகவே காணப்படும். சமூக வளர்ச்சியில் அக்கறை எடுக்காத எந்த அமைப்பும் இறையில் அமைப்பாகவே இருக்கும்.

எனவே, இறையடியான் இறையன்பையும் இறையருளையும் நிறைவாகப் பெற்று, இறைவனையும் இறைமக்களையும் மேன்மையடையச் செய்யும் நல்வாழ்வினை மேற்கொள்வான். இரட்சிப்பின் சின்னமாகிய சிலுவையைச் சுமந்துகொண்டு, இறைத் தேனினைச் சுவைத்து இன்புறுவான். இறைவழிபாட்டில் நிறைவுற்று வாழ இனிதே முழுமூச்சுடன் இணைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. இறை வாக்கு

இயேசு என்னும் பெயரைக் குறிக்கும் சொல் புதிய ஏற்பாட்டில் மூன்று பகுதிகளில் இடம்பெறுகின்றது. அவையாவன:

*1. யோவான் 1:1-13 - **வாக்கு மனிதன் ஆனார்***

*2. 1 யோவான் 1: 1:2 - **வாழ்வு அளிக்கும் வாக்கு***

*3. திருவெளிப்பாடு 19:13 - **கடவுளின் வாக்கு***

## 3.1. வாக்கு மனிதன் ஆனார்

*வாக்கியம் 1 - தொடக்கத்தில் வாக்கு இருந்தது,*

*வாக்கியம் 2 - அவ்வாக்கு கடவுளோடு இருந்தது,*

*வாக்கியம் 3 - அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது,*

என வாக்கைக் குறித்து யோவான் நற்செய்தியில் மூன்று வாக்கியங் கள் தரப்பட்டுள்ளன. 'தொடக்கத்தில்' என்ற சொல் தொடக்க நூலிலுள்ள தொடக்கத்தில் என்ற சொல்லை நினைவுபடுத்துகின்றது. ஒன்றுமில்லாமையிலிருந்து உலகம் உருவாக்கப்பட்டபோது, வரலாறு ஆரம்பிக்கப்பட்டபொழுது இருந்த வாக்கு கிறிஸ்துவோடு சமமாக் கப்படுகின்றது. வாக்கியம் 1 வாக்கின் என்றுமுள்ள தன்மையை, கடந் தேகுநிலையை வலியுறுத்துகின்றது.

வாக்கு கடவுளோடு இருந்தது எனும் 2ம் வாக்கியம் வாக்கு கடவுளி டமிருந்து வேறானவர் என்பதையும் உடனானவர் என்பதையும் விளக் குகின்றது.

'அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது' எனும் 3ம் வாக்கியம் வாக்கின் தெய்வீகத்தன்மையினை வலியுறுத்துகின்றது. இவ்வாறு இறைவனோடு கொண்டுள்ள தொடர்பில் வாக்கு என்றுமுள்ளதாகவும் கடந்தேகு தொடர்புடையதாயும் தெய்வீகத்தன்மையுடையதாயும் காணப்படுவதை யோவான் வலியுறுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோவான் நற்செய்தியின் முன்னுரையைப் பின்வருமாறு வகைப்படுத்த லாம்:

**I.** யோவான் *1:1-2* - தொடக்கத்தில் வாக்கு இருந்தது.
அவ்வாக்கு கடவுளோடு இருந்தது.
அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது.

**II.** யோவான் *1:3* - அனைத்தும் அவரால் உண்டாயின.

**III.** யோவான் *1:4-5* - அவரிடம் வாழ்வு இருந்தது.
அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது.
இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை.

**VI.** யோவான் *1:6-9* - யோவான் ஒளியைக் குறித்து சான்று பகர்ந்தார்.
அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது.

**V.** யோவான் *1:10* - ஒளியான அவர் உலகிற்கு வந்தார்.
உலகு அவரால்தான் உண்டானது.
ஆனால் உலகு அவரை அறிந்து கொள்ளவில்லை.

**VI.** யோவான் *1:11* - அவர் தமக்கு உரியவர்களிடம் வந்தார்.
அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

**VII.** யோவான் *1:12-13* - அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையை அளித்தார்.
அவர்கள் கடவுளால் பிறந்தவர்கள்.

**VIII.** யோவான் *1:14* - வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IX. யோவான் *1:15* - யோவான் அவரைக் குறித்து, 'எனக்குப் பின் வரும் இவர் என்னைவிட முன்னிடம் பெற்றவர்' எனச் சான்று பகர்ந்தார்.

X. யோவான் *1:16* - இவரது நிறைவிலிருந்து நாம் யாவரும் நிறைவாக அருள் பெற்றுள்ளோம்.

XI. யோவான் *1:17* - திருச் சட்டம் மோசே வழியாகக் கொடுக்கப் பட்டது.
அருளும் உண்மையும் இயேசு வழியாய் வெளிப்பட்டன.

XII. யோவான் *1:18* - கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை. கடவுள்தன்மை கொண்டவரான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தினார்.

இயேசு இறைமகனாக, மெசியாக விளங்குவதனால் அவர் 'கிறிஸ்து' என அழைக்கப்படுகின்றார். கிறிஸ்துவின் வாழ்வு இறைவாக்கினர்களின் வாழ்விலும் மேம்பட்டதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் இறை வாக்கினர்கள் பணிக்காக அழைக்கப்பட்டார்கள். ஆனால் இயேசுவின் வாழ்வோ பணியாகவே மாறியது. இறைத் தந்தையின் வடிவாக இயேசு விளங்குவது நித்தியத்திற்கும் வாழ்கின்ற தந்தையோடு தொடர்புபடுத் தப்பட்ட நிலையில் இறைவனை இயேசு வெளிப்படுத்துகின்றார் என்பதேயாகும். இது மனிதர் அனைவரதும் மீட்பினை முன்வைத்து மனிதர் மத்தியில் இயேசு மேற்கொள்ளும் பயணமாகும்.

## 3.2. வாழ்வு அளிக்கும் வாக்கு

*1* யோவான் *1:1-3* - தொடக்கத்தில் இருந்த வாழ்வு தரும் வாக்கை நாங்கள் கேட்டோம். கண்ணால் கண்டோம். உற்றுநோக்கினோம். கையால் தொட்டுணர்ந்தோம். வெளிப்படுத்தப்பட்ட அந்த வாழ்வை நாங்கள் கண்டோம். அதற்குச் சான்று பகருகின்றோம். தந்தையோடு இருந்ததும் எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதுமான அந்த இறைவாழ்வு பற்றி உங்களுக்கு அறிவிக்கின்றோம். தந்தையுடனும் அவரது மகன் இயேசுக் கிறிஸ்துவுடனும் நாங்கள் கொண்டுள்ள நட்புறவை நீங்களும் கொண்டிருக்குமாறு நாங்கள் கண்டதை, நாங்கள் கேட்டதை உங்களுக்கு அறிவிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உங்களுக்கு அறிவிக்கிறோம்' என்பதே இங்கு பிரதானமானது. தந்தையினால் எமக்கு வெளிப்படுத்தப்பட்ட முடிவில்லா வாழ்வு பற்றிய செய்தியே தெரிவிக்கப்படும் மையப் பொருளாகும். இந்த முடிவில்லா வாழ்வு என்பது வாழ்வின் வாக்காகும். வாழ்வின் வாக்கு என்பது கிறிஸ்து எனும் ஆளையே குறித்துநிற்கின்றது, சீடர்களால் தேடப்பட்டு, காணப்பட்டு, அனுபவிக்கப்பட்டு வந்த இயேசுவே நற்செய்தியின் பொருளாகின்றார். இறைவனுக்கும் வாக்குக்கும். இடையேயுள்ள தொடர்பு தந்தைக்கும் மகனுக்கும் இடையே நிலவுகின்ற ஆற்றலும் தூண்டுதல்மிக்க தொடர்பாக விளங்குகின்றது.

## 3.3. இயேசு கடவுளின் வாக்கு

*திருவெளிப்பாடு: **19:13**ல் கடவுளின் வாக்கு என ஒலிக்கப்படுவது இறுதித் தீர்ப்புக் காலத்தில் இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு நீதித் தண்டனை வழங்குவதைக் குறிப்பிடுகின்றது. இது சாலமோனின் ஞானம் **19:15-16** பகுதியோடு கருத்தியல்ரீதியாக தொடர்புபட்டிருப்பதை அவதானிக்கலாம்.*

*"பலமுறை பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ் இறுதி நாட்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்" (எபி. 1:1-2).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. இயேசு வாழ்வின் அப்பம்

"வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது" (யோவான் *6:35*).

யோவான் நற்செய்தியில் 6ம் அதிகாரத்தில் இயேசு அழியாவாழ்வின் அப்பமாக விளங்குவதோடு திருப்பலியில் கிறிஸ்துவின் ஆள்ரீதியான அருட்பிரசன்னம் வெளிப்படுத்தப்படுகின்றது என்பதை யோவான் துல்லியமாக உணரவைக்கின்றார். யோவான் 6ம் அத்தியாயத்தை ஆறு பிரிவுகளாக வகுத்து ஆராயலாம்:

***4.1.* அப்பங்களைப் பெருகச் செய்தல் *6:1-15***

***4.2.* கலிலேயக் கடல்மேல் நடத்தல் *6:16-21***

***4.3.* இயேசுவிடம் மக்கள் வருதல் *6:22-24***

***4.4.* வாழ்வின் அப்பம் உரைக்கான முன்னுரை *6:25-34***

***4.5.* வாழ்வின் அப்பம் உரை *6:35-58***

***4.6.* உரைக்குப் பதில் *6:59-71***

### 4.1. அப்பங்களைப் பெருகச் செய்தல் 6:1–15

இயேசுவின் பொதுப்பணி சார்ந்த புதுமைகளில் இதுவே நான்கு நற் செய்தி ஏடுகளிலும் பொதுவாகக் காணப்படும் ஒன்றாகும். இந்த அருளடையாளம் நற்கருணையோடு தொடர்வுபட்ட முறையிலேயே நான்கு நற்செய்தி ஏடுகளிலும் காணப்படுகின்றது. சிறப்பாக நான்காம் நற்செய்தியாளர் அப்பம் - நற்கருணைத் தொடர்பினை வலியுறுத்து கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இயேசு அப்பங்களை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோருக்குக் கொடுத்தார். அவ்வாறே மீன்களையும் பகிர்ந்தளித்தார்” (யோவான் *6:11*). இது இறுதி இராவுணவின் பொழுது நற்கருணை ஏற்படுத்திய பொழுது இயேசு கூறிய வார்த்தைகளை ஒத்துள்ளதாய் அமைகின்றது.

“பின்பு இயேசு அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றிசெலுத்தி அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்து, “இது உங்களுக்காகக் கொடுக்கப் படும் எனது உடல். எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்” என்றார் (லூக்கா *22:19*).

## 4.2. கலிலேயக் கடல்மேல் நடத்தல் 6:16–21

இயேசு கடல்மேல் நடத்தல் அவர் கடவுளுக்குச் சமமானவர், வல்லமை யுள்ளவர், அதிகாரம் மிக்கவர் என்பதை எண்பிக்கின்றது. எகிப்திய அடிமைத்துவத்திலிருந்து விடுவிக்கப்பட்டபொழுது இஸ்ராயேல் மக்கள் மோயீசனுடன் செங்கடலைக் கடந்து சென்றதுபோல மனுக்குலத்தை பாவத்தின் அடிமைத்துவத்திலிருந்து விடுவிக்க இயேசு முன்னடையா ளமாக கலிலேயாக் கடல்மேல் நடந்து சென்றார்.

## 4.3. இயேசுவிடம் மக்கள் வருதல் 6:22–24

இயேசுவினால் மக்கள் மீட்படையவேண்டும் என்பதையும் அனைத்தும் அவரால், அவரில் மகிமையடையும் என்பதையும் இயேசுவிடம் மக்கள் வருதல் குறிப்பிடுகின்றது.

## 4.4. வாழ்வு தரும் உணவு உரைக்கான முன்னுரை 6:25–34

இப்பகுதியில் இயேசு அப்பங்களைப் பெருகச் செய்ததின் அருங்குறியை மக்கள் உணரும்படி விளக்குகின்றார்.

## 4.5. வாழ்வு தரும் உணவு உரை 6:35–58

உலக மக்கள் அனைவருக்கும் அழியாத வாழ்வினை அளிப்பவராக இயேசு விளங்குகின்றார்.

“விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்” (யோவான் *6:51*).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய ஏற்பாட்டில் மன்னாவை உண்ட இஸ்ராயேல் மக்கள் இறந்தார்கள். ஆனால் இயேசு தரும் உணவை உண்ணும் எல்லாரும் என்றுமே வாழ்வர். இவ்வாறு நித்திய வாழ்வில் மனுக்குலத்தைப் பங்கெடுக்க வைத்தலே இயேசுவினது தியாக வாழ்வின் சிறப்பம்சமாகும்.

## 4.6. உரைக்குப் பதில் 6:59–71

"இந்தப் பேச்சை இன்னும் கேட்டுக் கொண்டிருக்க முடியுமா?" (யோவான் 6:60) என்று சீடர்களில் பலர் முணுமுணுத்துப் பின்வாங்கினர்.

வெறும் மனித இறைச்சியை உண்ண இயேசு அழைக்கிறார் என அவர்கள் எண்ணினார்கள்.

இயேசு பேசுவது தனது மாட்சிமைப்படுத்தப்பட்ட அழியாத உடல் பற்றியே என்பதை அவர்களால் உணர முடியவில்லை.

இயேசு பன்னிரு சீடர்களிடம், "நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா?" என்று கேட்டார்.

அப்பொழுது பேதுரு மறுமொழியாக, "ஆண்டவரே, நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன. நீரே கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்பதை அறிந்து கொண்டோம். அதை நாம் நம்புகிறோம்" என்றார் (யோவான் 6:68-69).

இயேசுவினைப் பிரிந்து, நாம் இரட்சிப்பினை அடைய முடியாது என்பதை புரிந்தவராய் திருத்தூதர் பேதுரு பேசினார். நிறைவாழ்வு தரும் வார்த்தையினை இயேசு கொண்டுள்ளார் என்பதைப் பேதுரு புரிந்து கொண்டார். இயேசுவுக்குள் வாழுதல், இயேசுவாக மாறுதல் இரட்சிப்பின் மறுபக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. கிறிஸ்தவ சீடத்துவம்

கிறிஸ்தவ சீடத்துவம் ஒருவரைப் புது வாழ்விற்கு அழைத்து நிற்கின்றது. ஆரம்பத்தில் ஒருவர் நல்ல ஒரு மனிதராக வாழ முற்படும்பொழுது கிறிஸ்தவ சீடத்துவம் உதயமாகின்றது. நன்மைத்தனத்தின் ஊற்றாகிய இயேசுவைப் பின்பற்றுவோர் நல்லவர்களாக, பிறரை அன்புசெய்வதில் வல்லவர்களாக வாழவேண்டும் என்றே இயேசு விரும்புகின்றார். இதனைப் பின்வரும் நிலைகளில் நோக்கலாம்:

***5.1. கிறிஸ்தவன் ஆவியினால் பிறப்பவன்***

***5.2. வாழ்வின் ஊற்றினைப் பருகுபவன்***

***5.3. இயேசுவில் வாழ்பவன்.***

## 5.1. கிறிஸ்தவன் ஆவியினால் பிறப்பவன்

"ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறை ஆட்சிக்கு உட்பட இயலாது என்று உறுதியாகச் சொல்லுகிறேன்" என்று நிக்கோதேமிடம் இயேசு மொழிந்தார் (யோவான் *3:5*). ஆவியினால் ஊட்டம் பெற்ற ஒருவர் தன் வாழ்வில் புதுப் பிறப்பை எய்துகின்றார். பழைய போக்குகள், பழைய மரபு முறைகளுக்கு அடிமைப்பட்ட மனநிலைகள் போன்றவற்றிலிருந்து விடுதலை பெற்று ஆவியின் ஒளியில் வாழ முற்படும்பொழுது அவர் கிறிஸ்தவ பண்பில் நிலைத்து, நிறைவுற்று வாழும் வாய்ப்பினைப் பெறுகின்றார்.

ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கை இரு முரண்பட்ட நிலைகளுக்கு இடையில் வெளிப்படுத்தப்படும் ஒன்றாக அமைவதை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையாவன:

**5.1.1. ஆவியின் நிலைக்கு உட்பட்டநிலை**

**5.1.2. நிறுவன நிலைக்கு உட்பட்டநிலை.**

### 5.1.1. ஆவியின் நிலைக்கு உட்பட்டநிலை

இந்நிலையில் ஒருவர் தனது வாழ்விலும் பிறரது வாழ்விலும் மாற்றத்தை, மறுமலர்ச்சியை விரும்புவராய் காணப்படுவார். சுதந்திரமான முறையில் கருத்துக்களைப் பரிமாறுவார். ஒரேமாதிரியாக எல்லோரும் செயற்பட வேண்டும் என்று வற்புறுத்த மாட்டார். மனித மாண்பினைப் பலவீனப்படுத்தும் அமைப்புக்களைத் தகர்த்தெறிவதில் முழுமூச்சாக இயங்குவாரர். அடிமைத்துவத்திற்குச் சான்று பகரும் மனிதத்தை மரணிக்கும் சட்டங்களைத் தவிடுபொடியாக்குவார்.

### 5.1.2. நிறுவன நிலைக்கு உட்பட்ட நிலை

இன்றைய காலகட்டத்தில் மனிதநேயம் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது. நிறுவனமயமாக்கல் ஆதிக்கம் செலுத்துகின்றது. சமய சமூக அமைப்புக்கள் சமூக நலன் கருதித் தோற்றுவிக்கப்பட்டாலும் காலப்போக்கில். 'அமைப்பு மனிதனுக்காக அல்ல, மாறாக மனிதன் அமைப்பிற்காக உள்ளான்' என்ற நோக்கு இல்லாதொழிக்கப்படுவது அவசியமாகும்.

## 5.2. வாழ்வின் ஊற்றினைப் பருகுபவன்

இயேசு சமாரியப் பெண்ணோடு மேற்கொண்ட உரையாடலிலிருந்து இரு உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டன. அவையாவன:

1. இயேசு வாழ்வளிக்கும் நீர்
2. ஆவியிலும் உண்மையிலும் தொழுதல்.

இயேசு வாழ்வளிக்கும் நீராக (யோவான் 4:10-14), இறைவாக்கினராக (யோவான் 4:16-19), மெசியாவாக (யோவான் 4:20-23) தன்னை வெளிப்படுத்தினார். இவ்வுரையாடல் பகுதியினைப் பின்வருமாறு காட்சிப்படுத்தலாம்:

**காட்சி 1: முதற்சந்திப்பு**

**இயேசு** - சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்கின்றார் (யோவான் 4:7).

**பெண்** - யூதாராகிய இயேசு தன்னோடு பேசுவதையிட்டு ஆச்சரியத்தையும் வெறுப்பையும் வெளிப்படுத்துகின்றார் (4:9).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி 2: கண்டுணர அழைப்பிதழ்**

இயேசு - உண்மையைக் கண்டுபிடிக்கும்படி சவால் விடுக்கின்றார் (4:10).

பெண் - சவாலைப் பிழையாக விளங்குகின்றார் (யோவான் 4:11-12).

**காட்சி 3: வாழ்விற்கான தாகத்தை உணரும்படி தூண்டுவித்தல்**

இயேசு - நித்திய வாழ்விற்கு இட்டுச் செல்லும் தண்ணீர் பற்றித் தான் பேசுவதாகத் தெளிவுபடுத்துகின்றார் (யோவான் 4:13-14).

பெண் - அத்தண்ணீரைத் தருமாறு கேட்கின்றார் (யோவான் 4:15).

**காட்சி 4 தன்னுணர்வு பெற ஆயத்தப்படுத்தல்**

இயேசு - அவளது கணவரைக் கூட்டி வருமாறு கூறுகின்றார் (4:16).

பெண் - தனக்குக் கணவன் இல்லை என மறுக்கின்றார் (யோவான் 4:17).

**காட்சி 5: ஒளியிடம் தன்னை வெளிப்படுத்தல்**

இயேசு - மறைக்க முயன்ற பெண்ணினது செயலைத் திருத்துகின்றார் (யோவான் 4:17-18).

பெண் - இயேசுவை இறைவாக்கினராக ஏற்றுக்கொண்டு தொழுதலைப் பற்றி அறிய முற்படுகின்றார் (யோவான் 4:19).

**காட்சி 6: இறுதிக் கண்டுணர்வு**

இயேசு - உண்மையான தொழுதலின் இயல்பை விளக்குகின்றார் (யோவான் 4:21-24).

பெண் - இயேசு யார் என்பதைக் கண்டுணருகின்றார். இயேசு அதனை உறுதிப்படுத்துகின்றார் (யோவான் 4:25-26).

**இக் காட்சியிலிருந்து புலனாகும் சிறப்பம்சங்கள் வருமாறு:**

**காட்சி 1:**

சாதாரண சந்தர்ப்பத்தில், எதிர்பாராத சூழலில், இச் சந்திப்பு நிகழ்வதை அவதானிக்கலாம். அன்றாடத் தேவைகளை நிறைவுசெய்ய மனிதன் முற்படும்பொழுது இறைவன் மனிதனைச் சந்திக்கின்றார். எம்மோடு நடமாடும் மனிதர்களின் வடிவில் இறைவன் வரும்பொழுது எம்மால் அவரை இனம்காண முடிகின்றதா?

**காட்சி 2:**

இங்கு இரண்டுவிதமான சவால்கள் வாசகர்களுக்கு விடப்படுகின்றன. அவையாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அனைத்திற்கும் மேலாக இறைச் செல்வத்தை இயேசுவில் கண்டுணர்தல்.
2. அன்றாடச் சூழலில் வெளிப்படுத்தப்படும் இறைவனைக் கண்டுணர்தல்.

**காட்சி 3:**
தாகம் ஏற்பட்டதும் தண்ணீர் குடிக்க வேண்டும் என்ற தேவை ஏற்படு கின்றது. இந்நிலை வாழவேண்டும் என்ற உணர்வின் வெளிப்பாடா கும். இத்தகைய சாதாரண உணர்வு வெளிப்பாடு நித்தியத்திற்கும் வாழ வேண்டும் என்ற நிறைவான உணர்வின் உச்சக்கட்டத்திற்கு இட்டுச் செல்கின்றது.

இதன் யதார்த்தநிலை நோக்கு இயேசுவில் முற்றுப் பெறுகின்றது. எமது இதயம் இறைவனிலேயே அமைதியை அடைகின்றது. இறைவன் இயேசுவின் மூலம் எமது அழியாத தாகத்தைப் போக்கி. முடிவில்லா வாழ்வினைத் தருகின்றார்.

**காட்சி 4:**
அவள் தனது பாவங்களையும் பலவீனங்களையும் நினைவிற்குக் கொண்டு வருகிறார். அச்சத்திற்கு உள்ளாகின்றார். 'எனக்குக் கணவன் இல்லை' என நியாயப்படுத்துகின்றார். மனிதன் தனது பாவங்களை மறைக்க முயன்றாலும் இறைவனது நீதியான தீர்ப்பிலிருந்து தப்பிக்க முடியாதவனாகின்றான். அவன் தனது உண்மையான நிலையை ஏற்று இறைவனிடம் சரணடையும்பொழுதே இவைனின் வாழ்வளிக்கும் ஊற்றிலிருந்து பருகும் வாய்ப்பினைப் பெறுகின்றான்.

**5.1. இயேசுவில் வாழ்பவன்**
இயேசு ரபியாக யோவான் நற்செய்தியில் அழைக்கப்படுகின்றார் (யோவான் 1:38). அவரை 'ரபி' எனக் கூறிக்கொண்டு திருமுழுக்கு யோவானின் இரு சீடர்கள் இயேசுவைப் பின்தொடர்ந்தனர். சீடர்கள் அதிகரித்ததால் இயேசு யூதாவை விட்டுவிலக நேரிட்டது (யோவான் 4:1-3).

இயேசு பெரும் கல்விமானாக இல்லாதிருந்தும் சிறப்பாகக் கற்பித்ததை யிட்டு யூதர்கள் அதிசயித்தார்கள் (யோவான் 7:15). இயேசு மாணவர் களை நன்கு அறிந்து கொண்ட ஆசிரியராக, சீடர்களை நன்கு தெரிந்து கொண்ட குருவாகச் செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு திருத்தூதர்களை அழைத்த நிகழ்வு யோவான் நற்செய்தியில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. திருமுழுக்கு யோவானின் சீடர் இருவரும் (யோவான் 1:35-37) இயேசுவைப் பின்தொடர்ந்தார்கள். அந்திரேயா, அவரது சகோதரர் சீமோன் பேதுரு (யோவான் 1:35-42), பிலிப்பு (யோவான் 1:43-44), நத்தனியேல் (யோவான்1:45-51) ஆகியோர் இயேசுவைப் பின்தொடர்ந்தார்கள்.

அந்திரேயா, யோவான், பேதுரு ஆகிய சீடர்களை இயேசு அழைத்த காட்சி ஒத்தமை நற்செய்தியில் வேறுபட்ட சூழலில், வேறுபட்ட இடங்களில் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது (மாற்கு 1:16-20). நான்காம் நற்செய்தியின்படி முதல் மூன்று சீடர்களை இயேசு அழைத்தது யோர்தானுக்கு அப்பாலுள்ள பெத்தானியாவில் எனவும் அவர்கள் திருமுழுக்கு யோவானின் சீடர்கள் எனவும் கூறப்படுகின்றது. ஒத்தமை நற்செய்தி ஏடுகளின்படி முதற் சீடர்களின் அழைப்பு கலிலேயாக் கடற்கரையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சூழலில் நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

**கிறிஸ்தவ சீடத்துவத்தின் சிறப்பம்சங்களை யோவானின் நற்செய்தியின் கண்ணோட்டத்தில் பின்வருமாறு நிரைப்படுத்தலாம்:**

1. **தேர்ந்தெடுத்தலும் அழைத்தலும்**
2. **மனித சாட்சியம் - 'இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி' (1:26).**
3. **கேட்டல்**
4. **பின்பற்றல்**
5. **தேடுதல்**
6. **காணுதல்**
7. **வந்து பார்த்தல்**
8. **இயேசுவோடு உடனிருத்தல்**
9. **அனுப்பப்படுதல்**

### 1. தேர்ந்தெடுத்தலும் அழைத்தலும்

இயேசு நடந்துபோகும் பொழுது திருமுழுக்கு யோவானோடு சீடர்கள் நிற்பதைக் காணுகின்றார். இது யாவே சீனாய் மலையில் மோயீசன் முன்னால் நடந்து சென்றதைப் (வி.ப. 33:19) பிரதிபலிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்து அவரைப் பின்பற்ற அழைப்பது இறைத் திட்டத்தின்படியே நிகழ்கின்றது. இறைமகன் இயேசுவைச் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் புதியதொரு முறையினில் வாழ்வினை மேற்கொள்ள, வாழ்க்கைப் பிரச்சனைகளை எதிர் கொள்ள அழைக்கப்படுகின்றான். ஏற்கெனவே கிடைத்து வந்த சௌகரியங்களை, போலிப் பாதுகாப்புகள் போன்றவற்றை விட்டுவிட்டு பரிச்சயமில்லாத புதியதொரு திருப்பத்தைத் தனது வாழ்வில் காணும் அவன் சமூகம் தன்னை இந்நிலையில ஏற்றுக் கொள்ளுமா என்ற அங்கலாய்ப்பு சிறிதும் இல்லாமல் இயேசுவே தனக்குத் துணையாயிருக்கிறார் என்ற அசையாத நம்பிக்கையோடு தனது கிறிஸ்துவழிப் பயணத்தைத் தொடருகின்றான்.

## 2. மனித சாட்சியம்

"இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி" (யோவான் 1:36) என்று திருமுழுக்கு யோவான் இயேசுவைச் சுட்டிக் காட்டுகின்றார். இயேசுவின் இறைத்தன்மைக்குச் சான்று பகருகின்றார். விளங்காத நிலையில் இறை சந்திப்பு நிகழ்ந்தாலும் அதற்கு மனித காரணிகளே சான்று பகருகின்றன. இறைவனும் மனிதனும் சந்தித்தபொழுது இருவரும் சங்கமாகி விட்டனர் என்ற சந்தோசமான செய்திக்கு சாதாரண மனித நிகழ்வே சான்றாகின்றது.

## 3. கேட்டல்

இறைவனது செய்தியோ அல்லது இயேசுவின் செய்தியோ எல்லோருக்கும் கேட்பதில்லை. அன்பினில், உண்மையில் வாழுபவர்களே இயேசுவின் செய்தியைக் கேட்கின்றார்கள் (யோவான் 8:47). இறைவனோடு நெருங்கிய உறவுகொள்பவர்களால்தான், இயேசுவின் அன்பலைகளில் மிதப்பவர்களால்தான் அன்றாட வாழ்வில் இறைவன் பேசுவதைக் கேட்க முடிகின்றது.

"நீங்கள் நம்பாமல் இருக்கிறீர்கள். ஏனெனில் நீங்கள் என் மந்தையைச் சேர்ந்தவர்கள் அல்ல. எனது ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கும் அவையைத் தெரியும். அவையும் என்னைப் பின்தொடர்கின்றன" (யோவான் 10:27) என்று இயேசு மொழிந்தார். இயேசுவின் சீடன் இயேசுவின் குரலைத் தொடர்ச்சியாகக் கேட்டுப் பழக்கப் பட்டவன். ஏனைய சத்தங்களிலிருந்து வேறுபடுத்தி, அவரது இனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலை இனம் காணத் தெரிந்தவன். செபத்தின் மூலமாக அவரோடு நெருக்கமாக இணைந்திருந்து, அவர் பேசுவதை உன்னிப்பாகக் கேட்டு மகிழ்வுறுபவன்.

## 4. பின்பற்றல்

'என்னைப் பின்பற்றுங்கள்' என்ற இயேசுவின் அழைப்பை ஏற்று வாழுதலே இயேசுவின் சீடத்துவத்தின் சிறப்பாகும். இயேசுவை ஒளியாக (யோவான் 8:12), ஆயனாக (யோவான் 10:4-27), ஆசிரியனாக (யோவான் 12:28, 13:36, 21:19) ஏற்று பின்பற்றி வாழுபவனே சீடனாவான். யோவான் நற்செய்தியின்படி இயேசுவைப் பின்பற்றல் அவரோடு இணைந்திருப்பதைக் குறிப்பதாகும்.

மேலும், இயேசுவைப் பின்பற்றல் ஒரு விதையானது மண்ணில் விழுந்து மடிந்து புதியதொரு செடியைத் தருவது போன்று இயேசுவிலே வாழுதலைக் குறிப்பதாகும். இவ்வாறு மனிதன் சுயவிருப்பு வெறுப்பின்றி, துறவுநிலையில (எவருக்கும் அடிமையாகா சமநிலையில்) தற்சார்பற்று வாழுதல் இறைவனை மகிமைப்படுத்தலாகும்.

## 5. தேடுதல்

இயேசு திரும்பிப் பார்த்து, அவர்கள் தம்மைப் பின்தொடர்வதைக் கண்டு, 'என்ன தேடுகிறீர்கள்?' (யோவான் 1:38) என அவர்களிடம் கேட்டார். அவர்கள் 'ரபி நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?' என்று கேட்டார்கள் (யோவான் 1:38). அவர் அவர்களிடம் 'வந்து பாருங்கள்' என்றார் (யோவான் 1:39).

இயேசுவைத் தேடுதலே நற்செய்தியின் பிரதான கருவூலமாகும். எனினும் சிலர் பிழையான நோக்கோடு இயேசுவைத் தேடினார்கள். இயேசுவைக் கொல்லும் நோக்கோடு (யோவான் 7:11-14, 8:37,40) இயேசுவிடமிருந்து அப்பத்தைப் பெற்று உண்ணும் நோக்கோடு (யோவான் 6:24) இயேசுவைத் தேடினார்கள்.

நல்ல நோக்கோடு இயேசுவைத் தேடுதல் எப்பொழுதும் நல்ல விளைவையே ஏற்படுத்தும். அழியா வாழ்வைத் தருபவர் இயேசு என்ற நோக்கோடு தேடும்பொழுது ஒருவர் நிலையான வாழ்வைத் தனதாக்கிக் கொள்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6. காணுதல்

சீடனின் இலக்கு இயேசு இருக்கும் இடத்தை அறிந்து கொண்டு அவரோடு உடனிருத்தலேயாகும். அவனது பொருத்தமான பதில் இயேசுவிற்குள் நிறைவுற்று வாழ உடன்படுவதேயாகும்.

"நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்" (யோவான் 14:3).

### 7. வந்து பார்த்தல்

இயேசுவின் இருப்பிடத்தை அறிய சீடன் ஆர்வமாயிருத்தல் வேண்டும். அவ்வாறு ஆர்வத்தோடு காணப்பட்ட சீடர்களுக்கு, இயேசு "வந்து பாருங்கள்" (யோவான் 1:39) என்று அழைப்பு விடுத்தார். வருதல், பார்த்தல் ஆகிய சொற்கள் விசுவாசத்தைக் குறிப்பவையாகும். இயேசுவிடம் வருதல் இயேசுவை நம்புவதற்குச் சமமாகும்.

### 8. இயேசுவோடு உடனிருத்தல்

இயேசுவின் அழைப்பை ஏற்று சீடர்கள் இயேசு இருக்கும் இடத்தைக் கண்டு அவரோடு தங்கினார்கள் (யோவான் 1:39). இருத்தல் தந்தைக்கும் மகனுக்கும் இடையேயுள்ள, மகனுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையேயுள்ள நிரந்தரமான தன்மையினை வெளிப்படுத்துகின்றது. இது, மகன், தந்தை, விசுவாசி ஆகிய மூவருக்கும் இடையே நிலவும் பரஸ்பர உறவை வெளிப்படுத்துகின்றது. வாழ்வின் நற்கனிகளைச் சீடன் வழங்குதல் என்பது இயேசுவில் நிலைத்திருத்தல் மூலமே சாத்தியமாகின்து,

"நானே திராட்சைச் செடி, நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது" (யோவான் 15:5).

### 9. அனுப்பப்படுதல்

இயேசுவோடு நெருங்கிய உறவுடன் வாழ்வதன் விளைவு அதே இன்பத்தை ஏனையவர்களும் அனுபவிக்கவேண்டும் என்ற உந்துதலோடு அவர்களையும் இயேசுவிடம் அழைத்துவரச் செல்வதாகும். இயேசுவில் இணைந்து வாழ்ந்த அன்பு அனுபவத்தை, அருள் அமுதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் அள்ளிக் கொடுக்க, 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என வெளிக்காட்ட முனைவது சீடனின் வாழ்வில் தவிர்க்க முடியாததாகின்றது.

அந்திரேயா தனது இயேசு அனுபவத்தைத் தனது சகோதரன் பேதுருவிடம் பகிர்ந்து, அவரை இயேசுவிடம் அழைத்துவருகின்றார் (யோவான் 1:40-42). இயேசுவோடு இணைந்துகொண்டு, இயேசுவின் அன்பை அனுபவித்து மகிழ்பவன் நிச்சயமாகத் தனது வாழ்வில் இயேசுவை வெளிப்படுத்தியே தீருவான்.

எல்லோரிலும் எல்லோருக்காகவும் தன்னை விருந்தாக்கும் இயேசு தனது சீடர்கள் மூலமாக தனது இலக்கை நிறைவேற்றுவதில் ஆசையாயுள்ளார். அவரது இலட்சியக் கனவு நனவாகிட அர்ப்பணிப்போடு தமது வாழ்வை தாரைவார்த்துக் கொடுக்கும் அன்பு நெஞ்சங்கள் அதிகரிக்கின்றார்கள். பிறரன்புப் பணியிலே ஆர்வத்தோடு ஈடுபடுவோர் பாதிப்புற்றோரின் கண்ணீர் துடைப்பதில் இன்பம் காணுகின்றார்கள். நற்செய்தி தொடர்ந்து அறிவிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. இறைவனின் அன்பு

இறைவன் பேரன்பும் பேரிரக்கமும் உள்ளவராக, உண்மை அன்புக்கு அர்த்தம் கொடுப்பவராக, அன்பினால் அனைவரையும் வாழ்விப்பவராக விளங்குகின்றார். இறைஅன்பு எல்லை இல்லாதது. ஆழமானது. நிபந்தனையற்றது. மீட்புச் செறிவானது. அவரது அன்பை அனுபவரீதியாகச் சுவைத்து இன்புறுவதும் அதனை ஏனையவருக்கு வெளிப்படுத்துவதும் நல்வாழ்வின் விளக்கமாக அமைகின்றது.

*இறை அன்பு:*

1. **திருப்பாடலில்**
2. **எசாயா ஏட்டினில்**
3. **எரேமியா ஏட்டினில்**
4. **ஓசே ஆகமத்தில்**
5. **யோனா ஆகமத்தில்**
6. **மத்தேயு நற்செய்தியில்**
7. **லூக்கா நற்செய்தியில்**
8. **யோவானின் ஏடுகளில்**
9. **புனித பவுலின் திருமடல்களில்.**

**1. திருப்பாடலில்**

*"மக்களினத்தாரே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் புகழுங்கள்! ஏனெனில், ஆண்டவர் நமக்குக் காட்டும் அன்பு மிகப் பெரிது"* (தி.பா. *117:1-2).*

இங்கு, இறைவனது அருளன்பு நிலையானது என்று திருப்பாடல் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர்.
'என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு' என இஸ்ராயேல் மக்கள் சாற்றுவார்களாக.
'என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு' என ஆரோனின் குடும்பத்தார் சாற்றுவார்களாக.
'என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு' என ஆண்டவருக்கு
அஞ்சுவோர் அனைவரும் சாற்றுவார்களாக" (தி.பா. 118:1-4).

இவ்வாறு இறைவனின் பேரன்பு பற்றி திருப்பாடல் ஆசிரியர் தெளிவாக விளக்குகின்றார்.

## 2. எசாயா ஏட்டினில்

இறைவனின் அன்பு நிச்சயமானது. அது சாதாரண அன்னையின் அன்பைவிட மேலானது என எடுத்துரைக்கின்றார் இறைவாக்கினர் எசாயா.

"பால் குடிக்கும் மகவைத் தாய் மறப்பாளோ?
கருத்தாங்கினவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன். இதோ என் உள்ளங்கைகளில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன்" (எசாயா 49:15-16).

இஸ்ராயேலரின் பிரமாணிக்கமற்ற தன்மையைக் கண்டு, கடவுள் கோபம் கொண்டவராய் காணப்பட்டாலும் மிகுதியான அன்போடு, முடிவில்லாத இரக்கத்தோடு இறைவன் செயற்படுவதை எசாயா கோடிட்டுக் காட்டுகின்றார்.

"நொடிப் பொழுதே உன்னை நான் கைவிட்டேன். ஆயினும், பேரிரக்கத்தால் உன்னை நான் ஏற்றுக்கொள்வேன். பொங்கி எழும் சீற்றத்தால் என் முகத்தை இமைப்பொழுதே உனக்கு மறைத்தேன். ஆயினும் என்றுமுள்ள பேரன்பால் உனக்கு இரக்கம் காட்டிடுவேன்" என்கிறார் ஆண்டவர் (எசாயா 54:7-8).

## 3. எரேமியா ஏட்டினில

இஸ்ராயேல் மக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இறைவனின் பரிவன்பை மறந்து, அவரை உதாசீனப்படுத்தி வாழ்ந்தார்கள். எனினும் அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாணிக்கமற்ற தன்மையைப் பெரிதுபடுத்தாது இறைவன் அவர் களோடு புதியதொரு உடன்படிக்கையைச் செய்துகொண்டார். இதயங் களின்மேல் செய்து கொண்ட இந்த உடன்படிக்கையின் விளைவாக அழியாத அன்புறவு நிலைநாட்டப்படுகின்றது. "இஸ்ராயேல் வீட்டா ரோடும் யூதா வீட்டாரோடும் புதிய உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வேன் என்கின்றார் ஆண்டவர். அவர்களுடைய மூதாதையரை எகிப்து நாட்டினின்று விடுவிப்பதற்காக அவர்களை நான் கைப்பிடித்து நடத்தி வந்தபொழுது அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கை யைப் போன்று இது இராது. நான் அவர்களுடைய தலைவராயிருந் தும் என் உடன்படிக்கையை அவர்கள் மீறி விட்டார்கள் என்கிறார் ஆண்டவர்" (எரேமியா 31:31).

"அந்நாட்களுக்குப் பிறகு இஸ்ராயேல் வீட்டாரோடு நான் செய்யவிருக் கும் உடன்படிக்கை இதுவே. என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன். அதை அவர்கள் இதயத்தில் எழுதிவைப்பேன். நான் அவர் களது கடவுளாய் இருப்பேன். அவர்கள் எனது மக்களாய் இருப்பார்கள் என்கிறார் ஆண்டவர்" (எரேமியா 31:33).

## 4. ஓசேயா ஆகமத்தில்

"எப்ராயிமே! நான் எப்படி உன்னைக் கைவிடுவேன்?
இஸ்ராயேலே! நான் எப்படி உன்னைக் கைநெகிழ்வேன்?
என் இரக்கம் பொங்கி வழிகின்றது. என் சீற்றத்தின்
கனலைக் கொட்டமாட்டேன். எப்ராயிமை அழிக்கத் திரும்பி
வர மாட்டேன். நான் இறைவன், வெறும் மனிதன் அல்ல.
நானே உங்கள் நடுவிலிருக்கும் தூயவர். ஆதலால், நான்
நகர்க்கு எதிராக வரமாட்டேன்" (ஒசேயா 11:8-9).

## 5. யோனா ஆகமத்தில்

யோனா இறைவாக்கினர் நினிவே நாட்டு மக்களை மனம் திரும்பும் படியும் இல்லையேல் அவர்கள் அழிக்கப்படுவார்கள் என்றும் எச் சரிக்கை விடுத்தார். அவரது போதனையை ஏற்ற மக்கள் மனம் மாறிய தால் அழிவிலிருந்து தப்பித்துக் கொண்டார்கள். இறைவன் இரக்கத் தோடு அவர்கள் சார்பாக நடந்துகொண்டார்.

ஆனால் யோனாவிற்கு சிறிதும் பிடிக்கவில்லை. அவர் கடுஞ் சினம் கொண்டு ஆண்டவரிடம் முறையிட்டார். ஆண்டவரே **"நான் ஊரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுப் புறப்படும் முன்னே இதைத்தானே சொன்னேன். இதை முன் னிட்டே நான் தரிசிற்கு ஓடிப்போக முனைந்தேன். நீர் கனிவுமிக்கவர். இரக்கமுள்ளவர். மிகுந்த பொறுமையும் அளவில்லா அன்பும் உள்ள கடவுள் என்பது எனக்குத் தெரியும். அழிக்க நினைப்பீர். பின் மனத்தை மாற்றிக் கொள்வீர் என்பது எனக்கு அப்போதே தெரியும். ஆகையால் ஆண்டவரே, எனது உயிரை எடுத்துக் கொள்ளும். வாழ்வதைவிட சாவதே எனக்கு நல்லது" என்று வேண்டிக்கொண்டார் (யோனா 4:1-3).

ஆண்டவர் அவரை நோக்கி, "அந்தச் செடி ஓர் இரவில் முளைத் தெழுந்து, மறு இரவில் முற்றும் அழிந்தது. நீ அதற்காக உழைக்க வுமில்லை. நீ வளர்க்கவும் இல்லை. அதற்கு இவ்வளவு இரக்கம் காட்டு கிறாயே! இந்த நினிவே மாநகரில் இலட்சத்து இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். வலக்கை எது, இடக்கை எது என்று கூடச் சொல்லத் தெரியாத இத்தனை மக்களும் அவர்களோடு எண்ணி றந்த கால் நடைகளும் உள்ள இந்த மாநகருக்கு நான் இரக்கம் காட்டா மல் இருப்பேனா?" என்றார் (யோனா 4:10-11).

## 6. மத்தேயு நற்செய்தியில்

இறைவன் எல்லோர் மீதும் கருணையும் கரிசனையும் உடையவராக விளங்குகின்றார். "அவர் நல்லோர் மீதும் தீயோர் மீதும் தன் கதிர வனை உதிக்கச் செய்கின்றார். நீதியுள்ளோர் மேலும் நீதியற்றோர் மேலும் மழை பொழியச் செய்கின்றார்" (மத்தேயு 5:45). எல்லோர் மேலும் எதுவித பாரபட்சமுமின்றி அருள் மழை, அன்பு மழை பொழி யப்படுகின்றது.

இயேசு அங்கிருந்து சென்றபொழுது பார்வையற்ற இருவர் "தாவீதின் மகனே, எங்கள் மீது இரங்கும்" என்று கத்திக் கொண்டே அவரைப் பின்தொடர்ந்தனர் (மத்தேயு 9:27).

இயேசு அவர்களது கண்களைத் தொட்டு, அவர்களைக் குணப்படுத்தி இரக்கத்தை வெளிப்படுத்தினார்.

இறைவன் நீதியோடும் இரக்கத்தோடும் செயற்படுகின்றார் என்ற உண்மையை திராட்சைத் தோட்டத் தொழிலாளர் உவமை விளக்கு கின்றது. காலையிலிருந்து வேலை செய்தவர்களுக்கும் இடையில் வந்து வேலை செய்தவர்களுக்கும் சமமான கூலியே கொடுக்கப்பட்டது. விளைவாக, முதலில் வேலைக்கு வந்தவர்கள் திருப்தியடையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து மணியளவில் வந்தவர்கள் ஒரு தெனாரியம் வீதம் பெற்றுக் கொண்டனர். அப்போது முதல் வந்தவர்கள் தமக்கு மிகுதியாகக் கிடைக் கும் என்று எண்ணினார்கள். ஆனால் அவர்களுக்கும் ஒரு தெனாரி யம் வீதம்தான் கிடைத்தது. அதைப் பெற்றுக் கொண்டபொழுது அந் நிலக் கிழாருக்கு எதிராக முணுமுணுத்து, "கடைசியில் வந்த இவர்கள் ஒரு மணி நேரமே வேலை செய்தார்கள். பகல் முழுவதும் வேலைப் பளுவையும் வெயிலையும் தாங்கிய எங்களோடு இவர்களையும் இணை யாக்கி விட்டாரே" என்றார்கள். அவரோ அவர்களுள் ஒருவரைப் பார்த்து, "**தோழரே, நான் உமக்கு அநியாயம் செய்யவில்லை. நீர் என்னி டம் ஒரு தெனாரியம் கூலிக்கு ஒத்துக் கொள்ளவில்லையா? உமக்குரிய தைப் பெற்றுக் கொண்டு போய்விடும். உமக்குக் கொடுத்தபடியே கடைசியில் வந்த இவருக்கும் கொடுப்பது என் விருப்பம். எனக்குரியதை நான் என் விருப்பப்படி கொடுக்கக் கூடாதா? அல்லது நான் நல்லவ னாய் இருப்பதால் உமக்குப் பொறாமையா?" என்று இயேசு கூறினார் (மத்தேயு 20: 9-16).**

'இதய சுத்தியோடு இரக்க செயல்களை இதர மனிதர்களுக்குச் செய்வ தன் மூலம் இறை இன்பத்தையே நாம் நேருக்குநேராக அனுபவிக்கின் றோம்' என்ற உண்மையை மத்தேயு 25ம் அதிகாரம் தெளிவாக்கு கின்றது.

அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப் பக்கத்தில் உள்ளோ ரைப் பார்த்து, "என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே வாருங் கள். உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டி ருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள். ஏனெ னில் நான் பசியாயிருந்தேன். நீங்கள் எனக்கு உண்ணக் கொடுத்தீர்கள். தாகமாயிருந்தேன். என் தாகத்தைத் தணித்தீர்கள். அன்னியனாக இருந் தேன். என்னை ஏற்றுக் கொண்டீர்கள். ஆடையின்றி இருந்தேன். எனக்கு ஆடை அணிவித்தீர்கள். நோயுற்றிருந்தேன். என்னைக் கவனித் தீர்கள். சிறையில் இருந்தேன். என்னைத் தேடி வந்தீர்கள்" என்றார் (மத்தேயு 25:34-36).

ஏழை எளியவருக்கு, சின்னஞ் சிறியவர்களுக்குச் செய்த நன்மைகள் எல்லாம் இயேசுவிற்கே செய்ததாக அமைகின்றது. நாம் பிறர் சார் பாக மேற்கொள்ளும் நற்காரியங்களே நமது இரட்சிப்பின் ஆதாரங் களாகின்றன. எதை விதைக்கின்றோமோ அதையே நாம் அறுவடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றோம். கொடுப்பாருக்குக் குறைவில்லை என்பது எமது வாழ்வின் தத்துவம் ஆகின்றது.

## 7. லூக்கா நற்செய்தியில்

"அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் இரக்கம் காட்டி வருகின்றார். மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழிமரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவிற் கொண்டுள்ளார்" (லூக்கா 1:50, 55). இவ்வாறு மரியா இறைவனது இரக்க செயல்களை நினைத்து இறைவனைப் புகழ்ந்து பாடினார்.

உடனே வானகத்தூதரணி தூதருடன் சேர்ந்து "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உரித்தாகுக!" என்று கடவுளைப் புகழ்ந்தது (லூக்கா 2:13-14). இவ்வாறு இயேசுவின் பிறப்பினால் மண்ணகத்தில் ஏற்பட்ட பெரும் மாற்றத்தினை, இறை இரக்க உச்சக்கட்ட வெளிப்பாட்டினை வானதூதர் பெரும் மகிழ்வோடு புகழ்ந்து பாடினர்.

இயேசு ஒருமுறை சீமோன் எனும் பரிசேயனின் வீட்டில் உணவுண்ண அமர்ந்தார். அப்பொழுது அவ்வூரின் பாவிப் பெண் ஒருத்தி இயேசுவின் கால்மாட்டில் பின்புறமாய் அமர்ந்து, அழுதுகொண்டே அவர் பாதங்கள் மேல் கண்ணீர் பொழிந்து, அவரது பாதங்களைக் கூந்தலால் துடைத்து, முத்தமிட்டு, அப்பாதங்களில் தைலம் பூசினார். இதனைக் கண்ணுற்ற பரிசேயன், அவள் பாவி என்பதை அறியாமலே அவள் மேற்குறித்தவாறு செயற்படுவதை இயேசு அனுமதிக்கிறார் என்று தனது மனதால் கடிந்துகொண்டார். பரிசேயன் இவ்வாறு சிந்திப்பதை அறிந்த இயேசு அவனைத் திருத்துகிறார்.

"ஆகவே, நான் உனக்குச் சொல்லுகிறேன். இவர் செய்த பல பாவங்கள் மன்னிக்கப்பட்டன. ஏனெனில் இவர் மிகுதியாக அன்பு கூர்ந்தார். குறைவாக மன்னிப்பு பெறுவோர் குறைவாக அன்பு செலுத்துவோர் ஆவர்" என்றார் (லூக்கா 8:47).

இனி 'என் அயலான் யார்?' என்ற கேள்விக்குப் பதிலாக நல்ல சமாரியன் உவமை அமைகின்றது. இவ்வுமையில் மூவகையான ஆட்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்கின்றோம். அவர்களை கள்வர் கூட்டத்தினர், குரு கூட்டத்தினர், நல்ல சமாரியன் என வகைப்படுத்தலாம்.

### அ. கள்வர் கூட்டத்தினர்

இவர்கள் 'என்னுடையதெல்லாம் என்னுடையதே. உங்களுடையதும் என்னுடையதே' எனும் மனநிலையில் வாழ்பவர்கள். சேதம் விளைவிப்பவர்கள். சுயலாபம் கருதி வருத்தி வாழ்பவர்கள்.

### ஆ. குரு கூட்டத்தினர்

"என்னுடையவை எல்லாம் என்னுடையதே. உங்களுடையவை எல்லாம் உங்களதே' எனும் மனநிலையில் வாழ்பவர்கள். இவர்கள் ஆதரவற்ற அவனுக்கு உதவப் போய் தாம் ஆபத்தில் சிக்க வேண்டுமோ? என்று தமக்குள்ளே கேள்வி கேட்டுச் செயற்பட்டார்கள். தம்மை மையப்படுத்திச் சிந்தித்ததன் விளைவாக அவனை ஆபத்தில் விட்டுச் சென்றார்கள்.

### இ. நல்ல சமாரியன்

'நான் இவனுக்கு உதவாவிட்டால் இவனுக்கு என்னாகும்?' என்று அவனை மையப்படுத்திச் சிந்தித்தான். 'எனக்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை. நான் அவனைக் காப்பாற்றவேண்டும்' என்ற கரிசனை உணர்வே அவனை இவ்வாறு துரிதமாகச் செயற்படத் தூண்டியது. சமாரியன் அவனருகில் வந்து, அவனைக் கண்டு மனமிரங்கி, எண்ணெயும் திராட்சை இரசமும் வார்த்து, அவனது காயங்களைக் கட்டி, தனது சொந்த வாகனத்தில ஏற்றிச் சாவடிக்குக் கொண்டுபோய், அவனைக் கண்காணித்தான்.

"கள்வர் கையில் அகப்பட்டவருக்கு இம்மூவருள் எவர் அடுத்திருப்பவர் என உமக்குத் தோன்றுகின்றது?" என்று இயேசு கேட்டார். அதற்குத் திருச்சட்ட அறிஞர், "அவருக்கு இரக்கம் காட்டியரே" என்றார். நீரும் போய் அப்படியே செய்யும்" என்றார் (லூக்கா 10:37).

இறைவனின் அளவில்லாத இரக்கத்தை வெளிக்காட்டுகின்றது ஊதாரிப் பிள்ளையின் உவமை (லூக்கா 15:11-32). இது ஊதாரித்தனமாக அன்புசெய்யும் தந்தையின் உவமை என சில விவிலிய வல்லுனர்களால் வர்ணிக்கப்படுகின்றது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவர் தனக்குரிய சொத்தை எல்லாம் தந்தையிடமிருந்து பெற்றுக் கொண்டு, தொலைநாட்டிற்குச் சென்று, ஊதாரித்தனமாக வாழ்ந்து, சொத்தைச் சூறையாடினான். வறுமையில் வாடினான். பன்றிகளை மேய்த்தான். ஆயினும் பசியைப் போக்கப் போதியளவு உணவு கிடைக்கவில்லை. பசிக் கொடுமையைத் தாங்காது, வருந்திய வனாய் திருந்தித் தந்தையிடம் வருகின்றான். 'வருவான், வருவான்' என வழிமேல் விழி வைத்துக் காத்திருந்த தந்தை தனயன் தொலைவில் வரும்போதே கண்டு, மனமுருகி, ஓடிப்போய், கட்டி அணைத்து. முத்தமிட்டு, அன்போடு அவனை ஏற்றுக் கொண்டார். மகிழ்ச்சிப் பெருக்கோடு விருந்து படைத்தார். இடையில் வீடு வந்த மூத்தவனோ எதிர்பாராக் கொண்டாட்டத்தைக் கண்டு அதிர்ச்சி அடைந்தவனாய் தந்தையிடம் முறையிட்டார்: "பாரும். இத்தனை ஆண்டுகளாக நான் அடிமை போன்று உமக்கு ஊழியம் செய்து வருகிறேன். ஆயினும் என் நண்பரோடு நான் மகிழ்ந்து கொண்டாட என்றுமே ஓர் ஆட்டுக் குட்டிகூட நீர் தந்ததில்லை. ஆனால் விலை மகளிரோடு சேர்ந்து உம் சொத்தை எல்லாம் அழித்துவிட்ட இந்த உம் மகன் திரும்பி வந்த வுடனே இவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கிறீரே!" என்றார் (லூக்கா 15:29-30).

அதற்குத் தந்தை, "மகனே, நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய். என்னுடையதெல்லாம் உன்னுடையதே. இப்போது நாம் மகிழ்ந்து கொண்டாடி இன்புற வேண்டும். ஏனெனில், உன் தம்பி இவன் இறந்து போயிருந்தான். மீண்டும் உயிர் பெற்றுள்ளான். காணாமற் போயிருந் தான். மீண்டும் கிடைத்துள்ளான்" என்றார் (லூக்கா 15:31-32).

எதிர்பார்ப்பில்லாது, நிபந்தனையில்லாது அன்புசெய்யும் தந்தையின் தாராளமான தன்மையினை மூத்தவனால் புரிந்துகொள்ள முடிய வில்லை. இவ்வாறே இறைவன் மனிதர் சார்பாக, இயல்பாக, தாராள மான பரிவன்போடு செயற்படுவதை மனிதர் முழுமையாகப் புரிந்து கொள்வதில்லை.

மேலும், இறை இரக்கத்தைப் பெற்று, இறைவனோடு நல்லுறவை மேற்கொள்பவன் மனிதரோடும் புதுப்பிக்கப்பட்ட அன்புறவிற்கு உள் ளாகின்றான் என்பதை சக்கேயுவின் மனமாற்ற நிகழ்வு புலப்படுத்து கின்றது. இரட்சகராம் இயேசுக் கிறிஸ்துவைச் சந்தித்த சக்கேயு சந்தோசத்தோடு இயேசுவோடும் சக மனிதரோடும் சுக வாழ்வு வாழ முன்வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கேயு எழுந்து நின்று, "ஆண்டவரே, என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன். எவர் மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்" என்று இயேசுவிடம் கூறினார். இயேசு, "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று. ஏனெனில், இவரும் ஆபிரகாமின் மகனே! இழந்துபோனதை மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார்" என்று சொன்னார் (லூக்கா 19:8-10).

## 8. யோவானின் ஏடுகளில்

விபசாரத்தில் பிடிபட்ட பெண் ஒருத்தியைப் பரிசேயரும் சட்ட வல்லுனரும் இயேசுவின் முன் கொண்டுவந்து நிறுத்தி, "இத்தகையவர்களைக் கல்லால் எறிந்து கொல்லவேண்டும் என்பது மோயீசனின் சட்டம். இதற்கு நீர் என்ன சொல்லுகிறீர்?" என்று இயேசுவிடம் கேட்டார்கள். 'ஆம்' என்றால் இயேசு மனிதாபிமானமற்றவர் என்ற குற்றம். 'இல்லை' என்றால் இயேசு மோயீசனின் சட்டத்தை மீறியவர் என்ற குற்றம். எப்படியாவது இயேசுவில் குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்கோடு செயற்பட்டவர்களுக்கு இயேசுவின் பதில் பெரும் ஏமாற்றத்தையே கொடுத்தது. "உங்களுள் பாவமில்லாதவர் முதலில் அப்பெண்மேல் கல் எறியட்டும்" என்று அவர்களிடம் கூறினார் (யோவான் 8:7-8). அனைவரும் தத்தம் தவறுகளை உணர்ந்தவர்களாய் ஒருவர் பின் ஒருவராய், மௌனிகளாய் விலகிச் சென்றார்கள். இயேசுவும் அப் பெண்ணைத் தண்டிக்காது, திருந்திய உள்ளத்தோடு புதுவாழ்வு பெற்று வாழ அனுப்பினார்.

இயேசுவே உண்மையான திராட்சைச் செடி, நாம் அதன் கொடிகள் என இயேசு யோவான் 15ம் அதிகாரத்தில் கூறுகின்றார். கொடிகள் செடியில் நிலைத்திருந்து நற்கனிகள் கொடுப்பதுபோல் நாமும் இயேசுவில் நிலைத்திருந்து நற்சீடர்களாக வாழவேண்டும் என்றே இயேசு விரும்புகிறார்.

"என் அன்பில் நிலைத்திருங்கள். நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பதுபோல நீங்களும் என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள். நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல் நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்கவேண்டும் என்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கட்டளை. தனது நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை" (யோவான் *15:9-13*).

"அன்பார்ந்தவர்களே, ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவோமாக. எப்போதும் அன்பு கடவுளிடமிருந்தே வருகிறது. அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். அவர்கள் கடவுளை அறிந்துள்ளார்கள். அன்பில்லாதோர் கடவுளை அறிந்துகொள்ள வில்லை. ஏனெனில் **கடவுள் அன்பாயிருக்கிறார்.** நாம் வாழ்வு பெறும் பொருட்டு கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் கடவுள் மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல, மாறாக, அவர் நம்மீது அன்புகொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பி னார் என்பதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது" (1யோவான் *4: 7-10*).

"நான் யார் மீது அன்பு செலுத்துகிறேனோ அவர்களைக் கடிந்து தண் டித்துத் திருத்துகிறேன். ஆகவே நீர் ஆர்வம் கொண்டு மனம்மாறு. இதோ நான் கதவு அருகில் நின்று தட்டிக் கொண்டிருக்கிறேன். யாரா வது எனது குரலைக் கேட்டுத் கதவைத் திறந்தால், நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன். அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள்" (தி.வெ. *3:19-20*). இவ்வாறு இறைவன் என்பதற்கு அன்பு ஒன்றே வரைவிலக்கணமாய் அமைவதை புனித யோவான் விளக்கு கின்றார். இறைவனுக்கான அர்த்தம் அன்பிலே முழுமை பெறுகின்றது.

## 9. புனித பவுலின் கடிதங்களில்

"கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக்கூடியது எது? வேத னையா? இன்னலா? நெருக்கடியா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்கமுடியும்? சாவோ, வாழ்வோ, வானதூதரோ, ஆட்சியாளரோ, நிகழ்வனவோ, வருவனவோ, வலிமை மிக்கவையோ, உன்னதத்தில் உள்ளவையோ, ஆழத்தில் உள்ளவையோ, வேறெந்தப் படைப்போ நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழி யாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது என்பது என் உறுதியான நம்பிக்கை" (உரோ. *8:35-39*).

எமது உள்ளத்தின் அடித்தளத்தில் உறைந்திருக்கும் இறைவனோடு இரண்டறக் கலந்துவிட்டோம் எனின், எமது சுயநல 'நான்' மறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை 'நான்' புலப்படும் எனின், எம்மை இறை இயேசுவிடமிருந்து எதனாலும் எவராலும் பிரிக்க இயலாது. தூய 'நான்' இல் தீயதே இராது. அங்கு கனியதும் இனியதுமான நல்வாழ்வு மலரும்.

"நான் மானிடரின் மொழிகளிலும் வானதூதரின் மொழிகளிலும் பேசினாலும் அன்பு எனக்கில்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசை யிடும் தாளமும் போலானேன். இறைவாக்கு உரைக்கும் ஆற்றல் எனக்கு இருப்பினும் அறிவெலாம் பெற்றிருப்பினும் மலைகளை இடப் பெயரச் செய்யும் அளவுக்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும் என்னிடம் அன்பு இல்லையேல் நான் ஒன்றுமில்லை. நான் உடமை களையெல்லாம் வாரி வழங்கினாலும் என் உடலையே சுட்டெரிப் பதற்கென ஒப்புவித்தாலும் என்னிடம் அன்பு இல்லையேல் எனக்குப் பயன் ஒன்றுமில்லை. அன்பு பொறுமையுள்ளது. நன்மை செய்யும். பொறாமைப்படாது. தற்புகழ்ச்சி கொள்ளாது. இறுமாப்படையாது. அன்பு இழிவானதைச் செய்யாது. தன்னலம் நாடாது. எரிச்சலுக்கு இடம்கொடாது. தீங்கு நினையாது. அன்பு தீவினையில் மகிழ்வுறாது. மாறாக உண்மையில் அது அகமகிழும். அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும். அனைத்தையும் நம்பும். அனைத்தையும் எதிர் நோக்கியிருக்கும். அனைத்திலும் மன உறுதியாயிருக்கும். அன்பு ஒருபோதும் அழியாது. ஆக நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன. இவற்றுள் தலைசிறந்தது அன்பே" *(1கொரி. 13).*

இவ்வாறு புனித பவுல் அன்பின் உயர்நிலை, அன்பின் அவசியம், அன்பின் பண்புகள் பற்றி உயிரூட்டமான முறையில் வர்ணிக்கின்றார். அனைத்து அருட்கொடைகளிலும் அன்பே மிகச் சிறந்ததாகக் காணப் படுகின்றது. அன்பில்தான் கிறிஸ்தவ சால்பு வாழ்வு அடங்கியுள்ளது (கலா. *5:6*, கொலோ. *3:14*). நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழி யாய் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது (உரோ. *5:5*). இயேசுவிடம் அன்பு உருவெடுத்து (கலா. *2:20*) அவர் மரணித்தபொழுது முழுமையாக வெளிப்பட்டது (உரோ. *5:7-8*).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக்கு நிகராக அவனியில் எதுவும் இருக்க இயலாது.

ஆர்வத்தோடு அன்புவழி வாழ்வோர் இறை இதயத்தில் இடம்பெறுவர்.

இயேசுக் கிறிஸ்துவின் அன்பிலிருந்து எம்மை எதுவும் பிரிக்க இயலாது.

இயேசுவோடுள்ள பரிவன்பு எம்மை இறைவனோடும் மனிதரோடும் இணைக்கின்றது,

உண்மை பேசி உயர்ந்தோரே உண்மை அன்பின் சாட்சிகள்.

ஊர் வாழ உனை வழங்கின் உயர்வாகும் உன் மனமே!

எல்லையில்லா அன்பால் உன் மனம் மாளிகையாகட்டும்!

என்றும் தன்னில் நிறைவுற்று இறைவனில் இணைந்து வாழ்பவன் பேரன்பம் பெறுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. நல்வாழ்விற்கான படிமுறைகள்

## 7.1 'இருக்கும் நிலையில் நான் உன்னை அன்பு செய்கின்றேன்' என்று இறைவன் கூறுவதை ஏற்றுக்கொள்வோம்

எமது இயற்றிறன்களோடும் இயலாமைகளோடும் பலங்களோடும் பலவீனங்களோடும் இறைவன் எம்மை அப்பட்டமாக நாளாந்தம் அன்பு செய்கின்றார்.

'பொருட்கள் பாவனைக்கு, ஆட்கள் அன்பு செய்யப்படுவற்கு' என்பது இறைவனின் அகராதியில் தெளிவடைகின்றது, அடிமைத்துவம் எந்த நிலையில் வடிவம் எடுத்தாலும் அதை உடைத்தெறிதலே எமது உயர் வான கடமையாகும்.

## 7.2. இதயத்தின் உண்மையை இயேசுவிடம் ஒப்புக் கொடுப்போம். அவர் சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றுவார்

நாத்தான் தாவீது அரசரிடம் வந்து பின்வருமாறு கூறினார்: ஒருவன் செல்வன். மற்றவனோ ஏழை. செல்வனிடம் ஆடு, மாடுகள் ஏராளமாக இருந்தன. ஏழையிடம் ஓர் ஆட்டு குட்டியை விட வேறொன்றும் இல்லை. அது அவனோடும் அவனது குழந்தைகளோடும் இருந்து வளர்ந்து பெரியதாகியது. அவனது உணவை உண்டு கிண்ணத்தில் நீர் குடித்து அவனது மடியில் உறங்கி அவனுக்கு மகளைப் போலவே இருந்தது. வழிப்போக்கன் ஒருவன் செல்வனிடம் வந்தான். தன்னிடம் வந்த வழிப்போக்கனுக்கு உணவு தயார் செய்யத் தன் ஆடு, மாடு களில் இருந்து ஒன்றை எடுப்பதை விட்டு அந்த ஏழையின் ஆட்டுக் குட்டியை எடுத்து உணவு தயார் செய்தான்.

உடனே அம்மனிதன் மேல் சீற்றம் கொண்டு "ஆண்டவர் மேல் ஆணை. இதைச் செய்தவன் கட்டாயம் சாகவேண்டும்" என நாத்தானிடம் தாவீது கூறினார். அப்போது நாத்தான் தாவீதிடம் "நீயே அம்மனிதன்" என்று கூறினார் (2சாமுவேல் 12:6). அப்பொழுது சாமுவேல், நீயே அம்மனிதன். உரியாவை நீ வாளுக்கு இரையாக்கி, அவன் மனைவியை உன் மனைவியாக்கிக் கொண்டாய்" என்றார் (சாமுவேல் 12:7). தாவீது, "என் ஆண்டவருக்கு எதிராக நான் பாவம் செய்தேன்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாத்தான், "ஆண்டவர் உன் பாவத்தை நீக்கிவிட்டார். நீ சாக மாட்டாய்" என்றார் (2 சாமுவேல் 12:13).

## 7.3.வாழ்வின் உரிமையை இயேசுவிடம் ஒப்புக் கொடுப்போம்

"எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை அணிவோம் எனக் கவலைப்படாதீர்கள். அனைத்திற்கும் மேலாக அவரது மாட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவை அனைத்தும் சேர்த்துக் கொடுக்கப்படும் (மத்தேயு 6:25,33). கிறிஸ்துவுக்குள் வாழப் பயிற்சி எடுப்போம். நாங்கள் கிறிஸ்துவுக்குள் இணைந்திருந்தால் எல்லாம் எமக்கு ஆசீர்வாதமாக மாறும்.

"ஆண்டவரே, நாங்கள் யாரிடம் போவோம்? நிலையான வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன. நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்பதை நாம் கண்டுகொண்டோம். அதை நம்புகிறோம்" (யோவான் 6:68) என்று பேதுரு பேசி, இயேசுவில் தனது வாழ்விற்கு அர்த்தம் கண்டார்.

## 7.4.தூய ஆவியால் நிரம்பலுறுவோம்

"கிறிஸ்து தூய ஆவியினால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார்" (மத்தேயு 3:4). "தூய ஆவியார் எமது வலுவற்ற நிலையில் எமக்குத் துணைநிற்கிறார்" (உரோ. 8:26).

எமது வாழ்வு சார்பாக இறைவனின் திட்டம் என்ன? வளமான எதிர்காலத்தை நிர்மூலமாக்கும் திட்டம் அல்ல. மாறாக, நிறைவான எதிர்காலத்தை நல்கும் திட்டமாக அது அமைகின்றது,

சீடன் தனது குருவிடம் கேட்டான்: "நீங்கள் எவ்வாறு ஒளி பெற்றீர்கள்?

பதிலாகக் குரு சொன்னார்:
"நான் சாப்பிடும்பொழுது சாப்பிட்டேன்.
பார்த்தபொழுது பார்த்தேன்.
செவிமடுத்தபொழுது செவிமடுத்தேன்.
இதுதான் நான் செய்தேன்."

"இதைத்தானே எல்லோரும் செய்கிறார்கள்" என்று சீடன் முனகினான்.

குரு பெரும் சிரிப்புடன், "எலலோரும் அவ்வாறு செய்கிறார்களா? அப்படி எனின் எல்லோரும் ஒளிபெறுவார்கள்" என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. என்னை மாற்றியருளும்!

"எல்லா மனிதர்களுக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது" (தீத்து 2:11) என்று புனித பவுல் கிறிஸ்துவின் உலகளாவிய நற்செய்தி யினை உறுதிப்படுத்துகின்றார். கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்ற மறை பொருள் கிறிஸ்து இயேசுவில் முழுமையாக வெளிப்படுத்தப் பட்டது.

திடீரென்று ஆண்டவரின் தூதர் அவர்கள் முன் வந்துநின்றபோது ஆண்டவரின் மாட்சி அவர்களைச் சுற்றி ஒளிர்ந்தது (லூக்கா 2:9).

"குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத்தொட்டியில் கிடத்தியிருப் பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்" (லூக்கா 2:11) என்ற வானதூதரின் கூற்று இயேசுவின் புரட்சிகரமான பிறப்பின் உட்பொருளை வெளிக்காட்டி நிற்கின்றது.

நான் என்னை மாற்றவேண்டும் எனில் எங்கிருந்து ஆரம்பிப்பது? உலகில் பலர் வெளியரங்க மாற்றத்திலேயே கவனம் செலுத்துகின்றார்கள். வெளி யரங்க மாற்றத்தைவிட உள்ளரங்க மாற்றம் மிகவும் கடினமானது. எனி னும் உள்ளரங்க மாற்றத்தைத் தோற்றுவிப்பதுதான் அவசியமானது.

"இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திரு வுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்றும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்" (உரோ. 12:2) என்று புனித பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத் தில் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு மட்டும் எம்மை இரட்சிக்காது. அறிவு மட்டும் எம்மை மாற்றாது. வருத்தம் இன்றித் திருத்தம் இல்லை. வருத்தத்தை அனுபவித்தே திருத்தத்தை எதிர்கொள்ளலாம். மனங்கள் புதுப்பிக்கப்படும்பொழுது மறுமாற்றம் அடைவது சாத்தியமாகின்றது. இது எப்படி நிகழ்கின்றது?

## 1. உள்ளகரீதியாக மாற்றம் அடைதல்

ஒரு மயிர்கொட்டி வண்ணாத்திப் பூச்சியாக மாற்றம் அடைவதுபோல நானும் என்னில் ஒருங்கிணைந்து உள்ளக மாற்றத்தைத் தோற்றுவிக்க வேண்டும். "இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்து, ஓர் உயர்ந்த மலைக்கு அவர்களை மட்டும் தனிமையாகக் கூட்டிக் கொண்டுபோனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எந்தக் சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்கு வெள்ளை வெளேரென ஒளிவீசின" (மாற்கு *9:2-3*). இயேசு இயேசுவாகவே மறுமாற்றத்தின்பொழுது காணப்பட்டார். இயேசு தனது மனிதநிலையை, அடிப்படை இயல்பை இழந்து விடாமல் அவர் கடவுளாயும் மனிதனாயும் இருந்தார் என்ற நிலைபாட்டை உறுதிப்படுத்தினார்.

"என் அன்பார்ந்தவர்களே, இப்போது நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். அவர் தோன்றும்பொழுது நாமும் அவரைப்போல இருப்போம். ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம்" (*1*யோவான் *3:2*).

"தம்மால் முன்னே தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் தம் மகனின் சாயலுக்கு ஏற்றவாறு இருக்கவேண்டும் எனக் கடவுள் முன்குறித்து வைத்தார்" (உரோ.*8:29*) என்று புனித பவுல் மீட்பின் திட்டத்தை தெளிவுபடுத்தினார். நான் நிறைவுபெற்ற முடிவுப் பொருள் அல்ல. மாறாகத் தொடர்ந்து மாற்றத்திற்கு, உருவாக்கத்திற்கு உள்ளாக்கப் பட்டுவரும் இயேசுவின் உடனுழைப்பாளி. இந்த இலக்கு நோக்கிய பயணம் இறைவனால் நிறைவாக்கப்படுகின்றது.

எனது பலவீனங்களில் கவனம் செலுத்தாது, நம்பிக்கையை இறைவனின் பிரமாணிக்கமான தன்மையில் கவனம் செலுத்தி, நம்பிக்கையின் நட்சத்திரமாய் பிரகாசிப்பேன். கடவுள் தாம் தொடங்கிய அலுவல்களை முடிப்பதற்கு ஆர்வத்தோடும் உள்ளேனா? நான் ஒத்துழைப்பு நல்க தயார்நிலையில் உள்ளேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மனத்தை மீள்ஒழுங்கு செய்தல்

நானே எனது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும்நிலையை மாற்றியமைக்க எனது ஆசையும் ஆற்றலும் ஒருங்கிணைய வேண்டும். எனது மனம் இயேசுவின் மனப்பான்மையோடு இசைவுறும்பொழுது நான் இயேசுவின் பிரதிபலிப்பாக உருமாற்றம் அடைகின்றேன். எனது ஆற்றல்களுக்கு, எனது வாழ்வியல் மதிப்பீடுகளுக்கு மீள் வடிவம் கொடுக்க வேண்டும். 'எனக்குள் இருக்கும் இயேசு, இயேசுவுக்குள் இருக்கும் நான்' என்ற ரீதியில் எனக்கும் இயேசுவுக்கும் இடையுள்ள பரஸ்பர உறவு பலப்படுத்தப்பட வேண்டும்.

## 3. மகிழ்வோடு வாழ பரிச்சயமாதல்

மகிழ்வோடு வாழுதல் என்பது எமது அன்றாட வாழ்வியல் பயிற்சி களிலும் முயற்சிகளிலுமே தங்கியுள்ளது. மகிழ்வோடு வாழுவதற்கான திறன்கள் பின்வருமாறு:

1. பரிவன்பு
2. பகிர்தல்
3. எளிமை
4. சுயகணிப்பு
5. நிறைகாண் மனப்பான்மை
6. நெகிழ்வுத்தன்மை
7. பெறுமதி.

நாலடியார் தமது பாடலில் கூறுவது போன்று மற்றவர் கூறும் கடுஞ் சொற்களைக் கேட்டு சினமடையாது பொறுத்துக் கொள்ளுவதும் நல்ல பண்புகளைப் பாராட்டுவதும் தீயார் நட்பை விட்டொழிப்பதும் நல்ல வர் கூறும் அறிவுரைகளைக் கேட்டு நடப்பதும் மகிழ்வான வாழ்வுக்கு அவசியமானவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. விருந்தோம்பலின் விழுதுகள்

இருப்பதிலிருந்துதான் கொடுக்கமுடியும். இல்லாமையிலிருந்து எதையும் கொடுக்க இயலாது. இறைவன் ஏற்கனவே நிறைவளங்களைக் கொடுத்து விட்டார். எனவே, இறைவன் தந்ததிலிருந்து பிறருக்குக் கொடுக்க முற்படுவோம்.

"கெட்ட கனிதரும் நல்ல மரமுமில்லை. நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும். நல்லவர் தன் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்" (லூக்கா *6:43-45)*.

## விருந்தோம்பலை வளர்ப்பதற்கான ஏழு வழிமுறைகள்:

**1. இறைவனின் வலிமைமிகு விருந்தோம்பலையே எப்பொழுதும் மனதில் நினையுங்கள்.**

கிறிஸ்துவின் மூலமாக வெளிக்காட்டப்படும் இறைவனது கொடுத்தல் நீங்கள் நாளாந்தம் கொடுத்து வாழவேண்டியதன் அவசியத்தைத் தூண்டு கின்றது.

"உங்களிடமுள்ளது அனைத்தும் நீங்கள் பெற்றுக்கொண்டவைதானே! பெற்றுக் கொண்டும் பெற்றுக்கொள்ளாததுபோல் பெருமை பாராட்டு வது ஏன்?" *(1கொரி. 4:7)*.

**2. உலக செல்வங்களை முதன்மைப்படுத்தாது இறைதேடலில் ஊக்கம் காட்டுங்கள்.**

"அனைத்திற்கும் மேலாக இறைவனது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவை அனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்" (மத்தேயு *6:33*). இறைவனது தாராளமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளல்தன்மையை, உலக மீட்பிற்காக இரட்சகர் இயேசு தன்னைத் தானே தாராளமாகத் தாரைவார்த்துக் கொடுத்ததை, அர்ப்பணப் பூக்க ளாய் புனிதர்கள் இறைவனின் தோட்டத்தில் மலர்ந்து மணம் பரப்புவதை அடிக்கடி மனதில் பதியுங்கள்.

**3.இறைவனது நிபந்தனையில்லாக் கொடுத்தலை மாதிரியாக்குங்கள்.**

நிபந்தனையில்லாக் கொடுத்தல் இறைவனது இயல்பாகும். இறைவனது இந்தப் பண்பினை உங்களுடையதாக்கிக் கொள்ளும்பொழுது நிபந் தனையில்லாக் கொடுத்தல் இலகுவாகின்றது. உங்களது மனப்பான்மை இறைவனது மனப்பாங்கை ஒத்ததாகி வலுப்பெறுகின்றது.

**4. உலக செல்வங்களை அளவீடாகக் கொண்டு செயற்படாதீர்கள்.**

உலக செல்வங்களைச் சேர்ப்பதையே இலக்காகக் கொண்டு இயங்கு பவர்கள், ஈற்றில் தம்மையே இழந்துவிடுவார்கள். "கடவுள் முன்னிலை யில் செல்வம் இல்லாதவர்களாய் தமக்காகவே செல்வம் சேகரிப்போர் இத்தகையோரே" (லூக்கா 12:21).

**5. இயல்பான விருந்தோம்பலில் ஆர்வம் காட்டுங்கள்.**

நலமான வாழ்விற்கு ஒரே ஒரு வழி கொடுத்தலும் கொடுத்துக் கொண்டே இருப்பதுமாகும். உங்களிடமுள்ளவற்றைத் தாராள மனப் பான்மையோடு கொடுக்க முன்வருவது உங்களது ஆரோக்கியமான வளர்ச்சியையே வெளிப்படுத்துகின்றது.

**6. கொடுத்தலுக்கான அளவீடுகளை அதிகரியுங்கள்.**

இறைக்க இறைக்க ஊறும் கிணறுபோல கொடுப்பாரின் மனதில் மகிழ்ச்சி வெள்ளம் ஆறாய் பெருக்கெடுத்தோடும். உள்ள அன்போடு கொடுத்தல், உவகையோடு கொடுத்தல், எதிர்பார்ப்பின்றிக் கொடுத்தல் போன்றவை கொடுத்தலின் சிறப்பான அளவீடுகளாகும். 'கொடுப்பாருக் குக் குறையில்லை' என்பது நல்வாழ்விற்கான ஊற்றாகும்.

**7. செயற்பாட்டுக்குச் சமனாக மனோபாங்கு முக்கியமானது எனக் கற்பியுங்கள்.**

"கொடுப்பவர் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும்! மனவருத் தத்தோடோ கட்டாயத்தினாலோ கொடுக்க வேண்டாம். முகமலர்ச்சி யோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர். கடவுள் உங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா நலன்களாலும் நிரப்பவல்லவர். எந்தக் சூழ்நிலையிலும் எப்போதும் தேவையானதெல்லாம் உங்களுக்குத் தருவார். அனைத்து நற்செயல்களையும் செய்வதற்குத் தேவையானதெல்லாம் உங்களுக்கு மிகுதியாகவே தருவார்" (2கொரி. 9:7-8)

"இவ்வுலகில் செல்வர்களாய் இருப்பவர்களுக்கு இவ்வாறு கட்டளையிடு. அவர்கள் மேட்டிமை உணர்வு கொள்ளலாகாது. நிலையில்லாச் செல்வத்தில் நம்பிக்கை வைக்காமல் நம்முடைய இன்பத்திற்காகவே எல்லாவற்றையும் நிறைவாக அளிக்கும் கடவுளை மட்டுமே எதிர்நோக்கி இருக்கவேண்டும். அவர்கள் நல்லதைச் செய்து நற்செயல்கள் எனும் செல்வத்தைச் சேர்ப்பார்களாக; தங்களுக்குள்ளதைத் தாராள மனத்தோடு பகிர்ந்தளிப்பார்களாக" (1திமொத்தேயு 6:17-18). இவ்வாறு புனித பவுல் செல்வந்தர்கள் எத்தகைய மனப்பான்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்து இயம்புகின்றார்.


எந்தவொரு நல்ல செயற்பாடும் நல்ல மனோபாங்கு உருவாக்கத்தின் பின்னணியில் அமையவேண்டும். கிறிஸ்துவின் மனப்பான்மையையே உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள். அவரது மனப்பான்மையில் உங்களது மனப்பான்மையை வடிவமைத்துக் கொள்ளுங்கள். இயேசுக் கிறிஸ்து பரிவன்பில், பணிவில், பரோபகாரத்தில், பகிர்தலில், பாசத்திற்குரிய பணியாள்தன்மையில், இதயபூர்வமானத் தொடர்பாடலில் சிறந்து விளங்கினார். இயேசு ஏழைகளுக்கு உணவு அளிக்கவில்லை. மாறாக அவர் ஏழைகளைத் தனது மேசைக்கு அழைத்தார். இயேசு மற்றவர்களுக்குத் தண்டனை வழங்காமல், மற்றவர்களைக் கீழ்நோக்கிப் பாராமல், எல்லோரையும் அன்போடு வரவேற்று ஆதரிப்பதிலே உன்னிப்பாகச் செயற்பட்டார்.

**அண்மையில் ஒரு கிராமத்தில் ஒளிவிழா இடம்பெற்றது. ஈற்றில் கிறிஸ்மஸ் பப்பா மேடையில் தோன்றி ஆடிக் கொண்டிருந்தார். அப்பொழுது ரொபிகளை மக்கள் மீது அவர் அள்ளி வீசினார்.**

**அவ்வேளை பல ரொபிகள் மேடையில் சிதறிக் கீழே கிடந்தன. ஒரு சிறுமி மேடையில் அமைதியாக ஏறி ஏழு, எட்டு ரொபிகளைப் எடுத்துக்கொண்டு கீழ் இறங்கிவந்து மற்றைய மாணவர்களுக்குப் பகிர்ந்தளித்தாள். அவள் தனக்கென்று எதையும் எடுக்கவில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 10. இதயபூர்வமான தொடர்பாடல்

இதயத்திலிருந்து எழும் தொடர்பாடல் இதயபூர்வமான தொடர்பாடல் என அழைக்கப்படுகின்றது, டாக்டர் மார்சல் றொசன்பேர்க் தொடர் பாடலை வன்முறையான தொடர்பாடல், வன்முறையற்ற தொடர்பாடல் (இதயபூர்வமான தொடர்பாடல்) என அழைக்கின்றார். வன்முறை யான தொடர்பாடலை விளக்கும் அடையாள விலங்கு நரி எனவும் வன்முறையற்ற தொடர்பாடலை விளக்கும் அடையாள விலங்கு ஒட்டகச்சிவிங்கி எனவும் மார்சல் வர்ணிக்கின்றார். நரி கள்ளம், கபடம், நேர்மையீனம் போன்ற பண்புகளை வெளிப்படுத்துகின்றது. அது புலப்படுத்தும் உணர்வுகள் பயம், பதட்டம், கோபம், சோகம் போன்றவையாகும். ஒட்டகச்சிவிங்கி பரிவு, நேயம், தியாகம், விட் டுக்கொடுத்தல், விளங்கிக் கொள்ளல் போன்ற பண்புகளைக் குறிப் பிடுகின்றது. வன்முறையற்ற தொடர்பாடலை வெளிக்காட்டும் உணர் வுகள் இரக்கம், விருந்தோம்பல், மகிழ்ச்சி, நன்னயம், நாணயம் போன்ற வையாகும். இனிமையான, இதமான, கனிவான பேச்சு சுவையான உணர்வுகளையே தரும்.

*1.* **"வாயின் சொற்கள் உமக்கு ஏற்றவையாய் இருக்கட்டும்! என் உள்ளத் தின் எண்ணங்கள் உமக்கு உகந்தவையாய் இருக்கட்டும்!"** (திருப்பாடல் *19:14*).

*2.* **"பொல்லாரின் சொற்படி நடவாதவர் பாவிகளின் தீயவழி நில்லாத வர், இகழ்வோரின் சூழலில் அமராதவர், அவரே பேறுபெற்றோர். அவர் நீரோடையோரம் நடப்பட்ட மரம்போலிருப்பார்"** (திருப்பாடல் *1:1-3*).

*3.* **"ஆண்டவரை மகிழ்ச்சியுடன் வழிபடுங்கள்!** ஆண்டவரே கடவுள் என்று உணருங்கள்! நன்றியோடு அவர் திருவாயில்களில் நுழையுங்கள்! நம்பத்தகுந்த கடவுளுக்கு நன்றி செலுத்தி அவரது பெயரைப் போற்றுங் கள்! **ஏனெனில் ஆண்டவர் நல்லவர்! என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு!"** (திருப்பாடல் *100:2-5*).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. "கடவுளே உமது பேரன்பிற்கேற்ப எனக்கு இரங்கும். உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றத்தைத் துடைத்தருளும். **தூயதோர் உள்ளத்தை என்னுள் படைத்தருளும். உறுதிதரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும்**" (*திருப்பாடல் 51:1,10*). இவ்வாறு தாவீது அரசர் ஆன்மாவின் எழுச்சிக் கீதத்தைப் பாடினார்.

5. "இஸ்ராயேல் வீட்டாரே, யூதா வீட்டாரே, புதிய உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்கின்றேன் என்கின்றார் ஆண்டவர். அவர்களுடைய மூதாதையரை நான் எகிப்தினின்று விடுவிப்பதற்காக அவர்களை நான் கைபிடித்து வழிநடத்திவந்தபோது அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கை போன்று இது இராது. அந்நாட்களுக்குப் பிறகு நான் இஸ்ராயேல் வீட்டாரோடு செய்துகொள்ளப்போகும் உடன்படிக்கை இதுவே. **என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன். நான் அவர்கள் கடவுளாய் இருப்பேன். அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள்** என்கின்றார் ஆண்டவர்" (*எரேமியா 31:31*).

6. **"நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருளுவேன். புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். உங்கள் உடலினின்று கல்லான இதயத்தை எடுத்துவிட்டு சதையிலான இதயத்தைப் பொருத்துவேன்"** (*எசெக்கியேல் 36:26*).


7. புனித அந்தோனியார் நிமினி தேசத்தில் போதித்தபோது பேசிய வார்த்தைகள்:

**"இயேசு நற்கருணைப் பேழையில் உங்களுக்காகக் காத்திருக்கின்றார். உங்களுக்குத் தனது அன்பைத் தரவிரும்புகின்றார். நீங்கள் அன்பைப் பதிலாகக் கொடுங்கள். அவரை அடிக்கடி சந்தியுங்கள்.** அவர் உங்களை ஏமாற்றமாட்டார்." நற்கருணைமீது ஆழ்ந்த பற்றுக்கொண்ட புனித அந்தோனியார் இயேசுவோடு இரண்டறக் கலந்தவராய், இதயபூர்வமான மொழி பேசினார். கடும் காய்ச்சலின் காரணமாக மொறொக்கோ தேசத்திலிருந்து புனித அந்தோனியார் கப்பல் ஏறுகையில் மொழிந்த வார்த்தைகள்:

**"இயேசுவே, என் எசமானே! என்னை, என் மனதை, என் இதயத்தை, என் விருப்பத்தை உமக்கே கொடுக்கிறேன். உமது நற்செய்தி வெளிச்சத்தைப் பரப்பிட என்னைப் பயன்படுத்தும். சிறிதும் குறையாமல் என்னிடமுள்ள எல்லாவற்றையும் உமக்கே கையளிக்கிறேன்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. கருணை மழை பொழிதல்

கனிந்த உள்ளத்தோடு நீங்கள் கருணை மழை பொழிய ஆரம்பித்ததும் கடவுளுடன் இணைந்து களிப்புறுவீர்கள். நீங்கள் காண்பது, கேட்பது, பேசுவது, உணர்வது எல்லாம் உங்களது நல் உள்ள வெளிப்பாடாக அமைவதை அனுபவித்து அறிந்துகொள்வீர்கள். புனித பவுல் கலாத்திய ருக்கு எழுதிய திருமுகம் *6:1-10* பகுதியில் பின்வருமாறு விளக்குகின்றார்.

### 1. கனிந்த உள்ளத்தோடு தவறியோரைத் திருத்துங்கள்.

தண்டிப்பது வேறு. திருத்துவது வேறு. தண்டிப்பதன் ஆதாரம் கோபம். திருத்துவதன் ஆதாரம் அன்பு. திருத்தந்தை 2ம் யோவாண் பவுல் 1981ம் ஆண்டு வைகாசி மாதம் 13ம் திகதி முகமது அலி அக்க என்பவரால் சுடப்பட்டார். ஆறு மணித்தியால அறுவைச் சிகிச்சையின் பின்னர் ஓரளவு நலமடைந்ததும் திருத்தந்தை சிறைச்சாலையில் கடும்காவலில் வைக்கப்பட்ட கைதியைக் காணச் சென்றார். தன்னைக் கொல்வதற் காகத் துப்பாக்கி ஏந்திய கைகளை அன்புடன் தாங்கிக்கொண்டு திருத் தந்தை திருவாய் மொழிந்தார்:

"முகமது அலி அக்க! நீ என் அன்புச் சகோதரன்.
உன்னை என் இதயத்தின் அடியிலிருந்து மன்னித்துவிட்டேன்."

### 2. சோதனைக்கு உள்ளாகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

வாழ்வில் சோதனைகள் வருவது இயல்பு. எனினும், சோதனையை வென்று சாதனை படைத்திடவே முயற்சி எடுங்கள். சோதனையைத் தவிர்ப்பதற்கு முன்கட்டமாக தவறான நண்பர்கள், தவறான சந்தர்ப்ப சூழ்நிலைகள், தவறான பழக்க வழக்கங்கள் போன்றவற்றை முற்று முழுதாகப் புறநீங்கல் செய்யுங்கள்.

### 3. மற்றவர்களது சுமைகளைத் தாங்கிக்கொள்ளுங்கள்.

சுமை சுமத்துபவர்களாக அல்ல சுமைதாங்கிகளாகவே உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள். "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்" (மத்தேயு *11:28-29*).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. பெருமைப்படாதீர்கள்.

"நான் பெருமையடையலாம் என்று கடவுளிடம் பலத்தைக் கேட்டேன். ஆனால் கீழ்ப்படியத் தாழ்மையைக் கற்கும்படி பலவீனமாக்கப் பட்டேன். நான் மனிதரின் புகழைப் பெறுவதற்காகக் கடவுளிடம் சக்தியைக் கேட்டேன். ஆனால் கடவுளின் தேவையை உணர எனக்குப் பலவீனத்தைத் தந்தார்" என்று மொழிந்தார் கீதாஞ்சலி புகழ் இரவீந்திர நாத் தாகூர். உண்மையும் தாழ்மையுமே உயர்வுக்கான ஏணிப்படிகள்.

## 5. உங்களது செயல்களை ஆய்ந்துபாருங்கள்.

உங்களை நீங்கள் ஆய்வுசெய்வது, உங்களது செயல்களை ஆய்வு செய்வது நீங்கள் பக்தியோடு முன்னெடுக்கும் அகப்பயணமாகும். உங்களது பலங்களையும் பலவீனங்களையும் சீர்தூக்கிப் பார்ப்பது உங்களது உள்ளகச் சக்தியை விழிப்படையச் செய்வதாகும்.

## 6. தீமை விதைப்போர் தீயதையே அறுவடைசெய்வர்.

நீங்கள் எதை விதைக்கின்றீர்களோ அதையே அறுவடை செய்வீர்கள். நஞ்சு விதையை விதைத்துவிட்டு எவ்விதம் நல்ல மரத்தை எதிர் பார்க்க முடியும்?

## 7. நன்மை விதைப்போர் நன்மையையே அறுவடைசெய்வர்.

"கெட்ட கனி தரும் நல்ல மரமுமில்லை. நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொன்றும் அதனதன் கனியாலே அறியப்படும். நல்லவர் தன் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர்" (லூக்கா 6:43-45).

**நீங்கள் இயல்பாகவே நல்லவர்களாக வாழமுற்படுங்கள்!**

**நீங்கள் நல்லவர்கள் என்பது நாளாந்த நிகழ்வுகளிருந்து புலப்படட்டும்!**

**நீங்கள் நல்லவர் என்று சொல்லும் அளவிற்கு உங்களது நன்மைத்தனம் உங்களை வளப்படுத்தட்டும்!**

**நீங்கள் நல்லவராக வாழும்பொழுது பல நல்ல உள்ளங்கள் ஆர்வத்தோடு உங்களைத் தேடி வருவார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாத்மா காந்தியின் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற உண்மைச் சம்பவம் இது. ஒருமுறை ஒரு திருடன் திருடிவிட்டு ஓடிக்கொண்டிருந்தான். அப்பொழுது காவலர்கள் துரத்தித் திருடனைப் பிடித்துவந்து, மரத்தில் கட்டி வைத்தார்கள். காந்திஜி வந்ததும் ஆர்வத்தோடு நடந்ததைக் காவலர்கள் எடுத்தியம்பினார்கள். உடனே காந்திஜி, "அவனை அவிழ்த்து விடுங்கள். அவனுக்கு உணவு கொடுங்கள்" என்று கருணைமழை பொழிந்தார். ஒத்துணர்வோடு மனிதநேயம் கொண்ட உள்ளங்கள் எப்பொழுதும் பிறர்சார்பாகக் கரிசனையோடு சிந்தித்துச் செயற்படுவார்கள். பிறர் வாழத் தம்மைத் தாரைவார்த்துக் கொடுப்பதிலே கரைகண்டவர்களாக விளங்குவார்கள். அவர்கள் சுயநலச் சிறைகளை உடைத்துவிட்டு, கறைப்பட்டோரைக் கருணையோடு மீட்பதிலே இலக்காக இயங்குவார்கள். எளியோரைத் தாழ்த்தி, வலியோரை வாழ்த்தும் இந்த உலகினிலே அவர்கள் ஏழைகளின் சுபீட்சத்திற்காக எரிந்து வெளிச்சம் கொடுப்பார்கள். "வாழ்வது ஒருமுறை, வாழ்த்தட்டும் தலைமுறை" என்ற கருணை அன்னை புனித தெராசாவின் வார்த்தைகளை வாழ்வாக்கி, வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார்கள்.

கருணை உள்ளங்களாய் அவனியில் வாழ்தல் இலகுவானது அல்ல. ஏனெனில், தீயசக்திகள் பல வடிவங்களில் உருவெடுத்து மனித மனங்களைக் காயப்படுத்தி, கடினப்படுத்த முனைகின்றன. எனினும் நல்லோர்கள் சிறுசிறு குழுக்களாக ஒருங்கிணைந்து வலைப்பின்னலாகச் செயற்பட முன்வருவது தனிமனித, குடும்ப, சமூக மறுமலர்ச்சியின் தோற்றுவாயாக அமையும். பலமுள்ள அன்புச் சமூகம் கட்டியெழுப்பப்படுவதற்கு திறந்த மனப்பான்மை, தூய பார்வை, இனிய பேச்சு, ஈகை வீச்சு, நல்லதைச் செய்யவேண்டும் என்ற ஆர்வம், இல்ல விருந்தோம்பல், இயற்கையோடு ஒத்துணர்வு போன்ற நற்பண்புகள் செயல்வடிவம் பெறவேண்டும்.

கருணை என்றால் என்ன? கருணை என்பது எல்லோரிடமும் மேற்கொள்ளும் கட்டுங்கடங்கா நேயவுணர்வாகும். எல்லா உயிரிகள் சார்பாக அக்கறையை இது வெளிக்காட்டுகின்றது. எவரையும் வெறுத்து ஒதுக்காது பிரபஞ்ச ஒன்றிப்பிற்கு உள்ளாக்கப்படும்பொழுது கருணை உணர்வலைகளால் உணர்வூட்டம் பெறுகின்றோம். வெறுப்புணர்வு, பகைமையுணர்வு போன்றவை மறைந்துபோக அறஉணர்வும் கருணை உணர்வும் மலர்கின்றன. கருணையுள்ள மனிதரிடம் பொறாமையோ குற்றவுணர்வோ இருப்பதில்லை. எமது நல்வாழ்விற்கு ஒரு திறவுகோல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திறவுகோல் எம்முள்ளே உள்ளது. அதை நாம்தான் உருவாக்க வேண்டும்.

எனவே, கருணைமழை பொழியும் மேகங்களாக எமது மனங்கள் மாறிட,

- நேர்நோக்குடன் பயணிப்போம்
- நேர்மையை முதன்மைப்படுத்துவோம்
- நல்ல நட்பிற்கு வித்திடுவோம்
- நல்லுறவை வளர்ப்போம்
- நானிலமெங்கும் நற்செய்தி நவில்வோம்
- நேயவுணர்வை வளர்ப்போம்.
- நேர்த்தியான எண்ணங்களைப் பெருகச் செய்வோம்
- நம்பிக்கையின் ஊடகங்களாய் மிளிர்வோம்
- நம்மிலே நாம் ஆறுதலடைவோம்
- நமக்கு மேலேயுள்ள இறைவனிடம் சரணடைவோம்
- நம்மையும் பிறரையும் தீமையிலிருந்து பாதுகாக்க முனைப்புடன் முயல்வோம்.

ஆக, நாம் ஒருங்கிணைந்து எமது வாழ்வினை தற்சார்பற்றநிலையில் ஆராய்வோம். பாரபட்சமற்ற பண்பிற்குப் புதுவடிவம் கொடுப்போம். எம்மையே நாம் ஏமாற்றாது புத்திசாலித்தனமாக எமது வாழ்வின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவோம்.

**இதயத்துடிப்புடன் இனிதே பேசி, மொழி, மத, இன பேதங்கள் கடந்து, உறவுப் பாலங்கள் அமைப் போம். மனிதம் மாண்புறவே, தூய அன்பு பெருகிடவே எமது உள்ளங்களில் இறைஇல்லம் அமைப்போம். கரு ணைக் கடலாகிய கடவுளின் பிரதிநிதிகளாய் அவனியில் அமைதி காப் போம். புன்னகை பூத்திட்டே, புண்ணியம் செய்தவண்ணம் பூவுலகில் சொர்க்கமதை எமதாக்குவோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்நூல் பற்றி...**

நவீன உலக ஆன்மீகம் பல கேள்விகள் மத்தியில் சவாலாய் இருக்கும் பொழுது வி.பி. அடிகளாரர் 'சொர்க்கம்' எனும் நூலில் ஆன்மீகத்திற்கு விளக்கம் கொடுத்து, கிறிஸ்து வாழ்வியல் கருத்துக்களைக் கொண்டு பதி னொரு தலைப்பிட்டு, புதிய தலைமுறையைக் கட்டியெழுப்பி, வாழ்வின் அர்த்தத்தைக் காண, மகிழ்ச்சியை அனுபவிக்க, வாழ்வைப் பிடிப்புடன் பின்பற்ற, அறைகூவல் விடுக்கின்றார்.


நம்வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருகின்றது. இன்பம் இனிமை தருகின்றது, துன்பம் துயரம் தருகின்றது என்று இன்பத்தையும் துயரத்தையும் அரவணைத்து வாழ மறுத்து, 'வாழ்வே தோல்வி' என்று வாழும் நிலையில் மக்கள் சோர்ந்து. தளர்ந்து மனஉழைச்சலுக்கு ஆளாகி இருக்கும்வேளையில் மனதிற்கு அமைதியைத் தரும் மருந்தாக, ஆன்மீக வாழ்வியல் கருத்துக்களை ஆசிரியர் முன்வைக்கின்றார். உதாரணமாக, 'ஆண்டவரே என் ஆயர்' முதல் அதிகாரத்தில் அன்பையும் பேரிரக்கத்தை யும் மேலெழுந்தவாரியாக அல்ல, ஆழமாக அனுபவித்து, சுவைத்து இன்புற ஆசிரியர் அழைக்கிறார். இறைவனது இல்லத்தில் நாம் நாளாந்தம் வாழும்பொழுது நாம் நிறைவான பேரின்பத்தை அனுபவிக்கலாம் என்பது வாழ்விற்கு சுகம்தரும் வரியாக அமைகின்றது. வாழ்க்கையைத் தொலைத்து விட்ட மனிதருக்கு நல்வாழ்வினைத் தரும் படிமுறையாக அடிகளாரின் 'சொர்க்கம்' அமைந்துள்ளது,

இறுதியில் 'கருணை மழை பொழிதல்' அதிகாரத்தில் உளவியல் இரசனை யோடு ஆன்மீக கானம் இணையும்பொழுது வாழ்வில் கருணை மழையை அனுபவித்தல் சாத்தியமாகின்றது என்பது நிரூபிக்கப்படுகின்றது. தகுந்த நேரத்தில், அதாவது, விழுமியங்கள் குறைந்து, மதிப்பீடுகள் மங்கிப்போகும் காலகட்டத்தில், அடிகளார் தரும் கிறிஸ்துவின் வாழ்வியல் கருத்துக்கள் எம்மை மீண்டும் இழந்த சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லட்டும்!

அடிகளாருக்கு அன்புப் பாராட்டுக்கள்!

**எஸ். டேமியன், அ.ம.தி.**
அதிபர், வசந்தகம், கொழும்புத்துறை.

oundation.
am.org






















ISBN 978-965-7706-08-4
9 789657 706084 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org